"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

# காரை ஆதித்தியன்

காலாண்டு சஞ்சிகை

குறைந்த கட்டணத்தில் விரைவான சேவை
உலகின் எப்பகுதிக்கும் தபால் சேவை
உட்பட சகல விதமான பொருட்களையும்
பொதி செய்து நேரடியாக கையில் கொண்டு
ஒப்படைக்கும் ஒரே நிறுவனம்

உங்களுக்கான புதிய அழைப்பு!

EXPRESS
CARGO
GLOBAL DISTRIBUTION NETWORK

Express Cargo Services Lanka (Pvt.) Ltd.
No.215/A, 1/2, George, R. De Silva Mawatha,
Colombo - 13, Sri Lanka.
Tel: 94 11 2437246, 94 11 2437551 E-mail: expresscargo@sltnet.lk

பதிப்பு | Registered as a Paper at The G.P.O
e.mail: karaiaathiththiyan1@msn.com

தலைமை அலுவலகம் : Karai Aathiththiyan, Thambiah Dayaparan, Postlagernd, 4102 Binningen-1, Switzerland.

சர்வதாரி வருடம், ஐப்பசி மாதம் 2009 | திருவள்ளுவர் ஆண்டு 2039 | பக்கங்கள் - 16

KARAIAATHITHTHIYAN | TAMIL | QUARTLY | சுடர் 12

உள்ளே

## 500 ஆண்டுகளின் பின் ஐயனாருக்கு ரதோட்சவம்



## காரை நகரில் மீளக் குடியமர்வு



## காரைநகர் பொன்னாலைப் பாலம் திருத்தப் பணிகள்



பாசல் தமிழ் மன்றம்
13-09-2009 இல் நடாத்திய
மெய்வல்லுநர் விளையாட்டுப்
போட்டியின் படங்கள் உள்ளே!






காரை ஆதித்தியன்
காலாண்டு சஞ்சிகை

POSTLAGERND 4102 BINNINGEN-1
SWITZERLAND

சமூகப் பார்வை என்பது என்ன என்பதை தெளிவாக புரிந்துகொண்டு நாம் செயல் பட்டால் உண்மையில் பல காரியங்கள் இலகுவாக முன்னேற்றம் அடைய வாய்ப்பு உண்டு. நாம் வெறும் நாற்காலியின் இடத்தை தக்க வைப்பதற்காக அல்லது தன் சொந்த சுய கௌரவத்தை இம்மியும் விட்டுக் கொடாது அதை செயல்படுத்தவே அந்த பதவியின் நிலையை பயன்படுத்திக் கொண்டு இது என்னால் [நான் தான்] தான் முடிந்தது என்ற ஆணவ தொனியுடன் செயல்படுபவர்கள் எதிர் காலத்தில் புதிய தலைமுறையினருக்கு முன்னால் வெட்கி தலைகுனியும் நிலைதான் உருவாகும். முதலில் ஒவ்வொரு புதிய சிந்தனையில் ஒவ்வொரு புதிய பார்வையில் ஆழமான கருத்துக்கள் உண்டு. அவற்றை நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். எமது கடந்த கால இறுமாப்பு செயல்பாடுகள் இப்போ செல்லாக் காசாகிவிட்டது. உள்ளூர்களிலும் சரி புலம் பெயர்ந்த நாடுகளிலும் சரி பொது சபைகள், சங்கங்கள், மன்றங்கள் உருவாக்குவதில் சிரமம் எதுவும் இருக்காது ஆனால் அவற்றை தொடர்வது வழி நடத்துவதில் தான் நாம் மிகப் பெரிய தவறு இழைக்க நினைக்கிறோம். இதில் என்னால் முடியும் முடிந்த என்ற மிகப் பெரிய சிக்கலிலிருந்து முதலில் வெளியில் வர வேண்டும் உலகத்தின் இயக்க செயற் பாடுகளை கூர்ந்து அவதானித்தால் நாம் எம்மட்டும் என்ற நிலை புரிந்துவிடும் ஆதலால் நம் சமூக நோக்கோடு நற் சிந்தனையோடு நல்ல மகிழ்ச்சிகரமான மனத்தோடு பொது வேலைத்திட்டங்களில் சமூக சேவைகளில் ஈடுபட வேண்டும். நாம் மற்றவர்களுக்கு நல்ல வழி காட்டியாக இருக்க வேண்டும் இனிவரும் தலைமுறையினரும் நல்ல சிந்தனைகளோடு வளர்க்கப்பட வேண்டும் என்ற நீண்ட நெடிய பார்வையோடு ஒவ்வொரு சமூக சேவையாளனும் வாழ வேண்டும். நியூட்டனின் பெயர்ச்சி விதிப்படி, ஒவ்வொரு செயலுக்கும், அதே அளவு நேர் எதிர் செயல் உண்டு. இந்த சாதாரண செயற்தொடர் ரகசியமாக இருந்த ஒரு விஞ்ஞான விந்தையை எளிதாக்கி விஞ்ஞானம் வளர மிக முக்கிய அத்திவார மாகியது. ஆகவே நான் சந்தோஷத்தை கொடுத்தால் நான் அந்த சந்தோஷத்தையே மீண்டும் அடைகிறேன். நான் துக்கத்தை கொடுத்தால். நான் அந்த துக்கத்தையே திரும்ப பெறுகின்றேன். இதே போன்றதே சமூக சேவையும் சமுதாய பங்காற்றலும் ஆகும்.

நன்றி
ஆசிரியர்
– சுவிற்சர்லாந்து –

ஊருடன் பகைக்கின் வேறுடன் கெடும்
– கொன்றைவேந்தன்– [ஔவையார்]–



"நன்று ஆற்ற எள்ளும் தவறு உண்டு அவர் அவர் பண்பு அறிந்து ஆற்றாக் கடை"
அவரவர் தகுதியும் திறமையும் அறிந்து காரியங்கள் செய்யாவிடின் நல்ல காரியங்கள் செய்வதில் கூட தவறுகள் நேர்ந்து விடும்

– திருக்குறள் –

# இருபத்து நான்கு மணிநேரமும் மீன் பிடிக்க அனுமதி

## காரைநகர் மாநாட்டில் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷஅறிவிப்பு!

யாழ் குடாநாட்டில் இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த மீன்பிடித்த டையில் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டு இருபத்து நான்கு மணிநேரமும் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பசில் ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான மாநாடு அண்மையில் காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷதலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் மற்றும் யாழ் மாவட்ட பிரதேச செயலாளர்கள், கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கிராம சேவையாளர்கள் உட்பட பலநூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

யாற்குடாநாட்டு மீனவர்கள் இருபத்து நான்கு மணிநேரமும் கடந்தொழிலுக்கு செல்லமுடியும். அத்துடன் பதினைந்து குதிரை வலுகொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் பூட்டி படகுகளில் சென்று தொழில் செய்ய முடியும்.
கடற்தொழிலாளர் களின் உபகரண கொள்வனவிற்கு முப்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடற்தொழிலாளர்கள் தமது தொழிலினை மேம்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.







### காரைநகரில் அதிக மீன்பிடி

யாழ் குடாநாட்டில் மீன்பிடித் தடையை நீக்கிய பின்னர் காரைநகரில் அதிகளவான ஆழ்கடல் சென்று மீன்பிடிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் பெரிய, பெரிய மீன்கள் அகப்படுவதாகவும் இதனால் தமது வாழ்வில் சுபீட்சம் ஏற்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனாலும் மீன்கள் பிடிபடுவதாக மீனவ சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

காரைநகரில் தற்போது நாற்பதிற்கும் மேற்பட்ட பகுககள் வெளியிணைப்பு இயந்திரங்ள் பூட்டப்பட்டு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் போதிய உபகரணங்கள் இன்மையால் முழுமையாக தொழில் செய்ய முடியாதுள்ளது. மீனவர்களிற்கு நிதி வசதிகள் பெறப்படின் திறமையாக தொழிலிலீடுபட முடியும். இதன் மூலம் அதிகளவு வருமானம் பெறமுடியும் என்றும் மேலும் தெரிவித்துள்ளனர்.

# காரைநகரில் சமூக சேவைகள் அமைச்சு சுயதொழில் உதவிகளை வழங்கியது

காரைநகர் பிரதேசத்தில் சமூக நலத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுடன் சுமார் நான்கு இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் மற்றும் இதர உதவிகள் வழங்கப்பட்டன.

இவ் உதவிகள் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ என்.டக்ளஸ் தேவானந்தா காரைநகரிற்கு வருகை தந்து வழங்கினார். இதன்மூலம் 66 பயனாளிகள் பயன்பெற்றனர்.

இவற்றுள் கோழிக்குஞ்சு வழங்களிற்கு 07 பயனாளிகளிற்கு 141,400 ரூபாவும் வீட்டுத் தோட்ட பொதிகள் 03 பயனாளிகளிற்கு 8400 ரூபாவும், நீர் இறைக்கும் இயந்திரம் 01 பயனாளிக்கு 36,091.50 ரூபாவும், மூக்குக் கண்ணாடி வழங்க 15 பயனாளிகளிற்கு 36,000 ரூபாவும் வாழை, தென்னை, மாங்கன்றுகள் வழங்க 10 பயனாளிகளிற்கு 22,000 ரூபாவும், பழ மரக்கன்றுகள் வழங்க 19 பயனாளிகளிற்கு 35,720 ரூபாவும், சிறுவன் ஒருவனுக்கு சைக்கிள் வழங்க 9,261.50 ரூபாவும், சிறுவர்களிற்கு 03 மாதங்களிற்கு பால் வழங்க 53,500 ரூபாவும், நுளம்புவலை வழங்க 07 பயனாளிகளிற்கு 8750 ரூபாவும், பசுமாடு வழங்க 36,700 ரூபாவும் பாடசாலைக்கு சூரிய மின்கலம் வழங்க 30,100.25 ரூபாவும் வழங்கப்பட்டது.

### மீன் எழுச்சி திட்டக் கிராமமான

# வியாவிலில்

### பல்வேறு அபிவிருத்திப் பணிகள்

காரைநகர் வியாவில் கிராமத்தில் மீன் எழுச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 30,000 ரூபா வரையான சுயதொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது. இயற்கை விருத்திச் செயற்பாடுகளிற்காக 1,81,260/= வாங்கப்பட்டுள்ளதுடன் கருங்காலி முருகமூர்த்தி ஆலயத்திற்குச் செல்லும் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. கருங்காலி கிராமத்தின் குடிநீர் செயற்பாடுகளிற்காக ஐந்து குடிநீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு காவரநகர் உதவி அரச அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள் சிரமதானத்தில் ஈடுபடுவதனையும் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் மரம் நாட்டுவதனையும் சுற்றும் சூழல் பாதுகாப்பு அதிகாரி திருமதி.தி. சிவானந்தன் அருகில் நிற்பதனையும் படத்தில் ககாணலாம்

# சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் குடிநீர் இல்லை மாணவர்கள் பாதிப்பு

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தின் கனிஷ்ட பிரிவு களபூமி ஆலடிச் சந்தியில் அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அங்கு தரம் 01 இல் இருந்து தரம் நான்கு வரையான சுமார் 65 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களிற்கான குடிநீர் வசதி இன்றி மாணவர்கள் சிரமப்படுவதாக வித்தியாலய அதிபர் சு.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பாடசாலை வசதியீனம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது எமது பாடசாலை தரம் ஒன்றில் இருந்து தரம் 04 வரையான அறுபத்தைந்து மாணவர்கள் கல்வி கற்கின்றார். இங்கு குடிநீர் வழங்குவதற்கான வசதிகள் இல்லை. பாரிய பிளாஸ்ரிக் கொள்கலன் இருந்தும் அதற்கான 'ஸ்ரான்ட்' இல்லை. அத்துடன் மாதம் மாதம் குடிநீரிற்கு பணமும் செலுத்த முடியாத நிலையுள்ளது. இதற்கு மாதாந்தம் சிறிய தொகைப் பணமே போதுமானது இதனை யாராவது கருத்திற்கொண்டு உதவி செய்ய வேண்டும்.

மேலும் வித்தியாசாலை கிணறுகளும் புடைசூழந்துள்ளது. இது எப்பவும் உடைந்து விழக்கூடும் இதனையும் புனரமைத்தால் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமாகவே தீர்வு காணக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சமூக சேவை பிரதேச அலுவலகத்திற்கு அடிக்கல்

காரைநகர் பிரதேச சமூக சேவை அலுவலகத்திற்கும் சிறுவர் நன்னடத்தை பிரதேச அலுவலகத்திற்குமான கட்டிடத்திற்கான அடிக்கல் வலந்தலையில் கட்டப்படுகின்ற புதிய பிரதேச செயலக கட்டடத்திற்கு அண்மையில் 24.06.09 அன்று நாட்டப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவி அரசாங்க அதிபர் இ.த. ஜெயசீலன் அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

சமூக சேவைகள் அமைச்சின் 1.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் கட்டப்படும் இக் கட்டடம் விசேட தேவைக்குரியோர் (அங்கவீனர்கள்) நேரடியாக அலுவலகத்திற்குள் சென்று அலுவலரைச் சந்தித்து தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் வசதியாக இக்கட்டடம் அமையவுள்ளது.

இக்கட்டடத்தின் ஒரு பகுதியாக சிறுவர் நன்னடத்தை பிரதேச அலுவலகமும் இணைந்து இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்பள்ளி மாணவர்களிற்கு பால் விநியோகம்

காரைநகர் பிரதேசத்தில் கல்வி கற்கும் 297 முன்பள்ளி சிறுவர்களிற்கு போஷாக்கு நிலையை உயர்த்தும் நோக்குடன் சமுர்த்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டுடன் பால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

காரைநகர் பிரதேச ஒன்பது கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள இம் மாணவர்களிற்கு 13 நிலையங்களில் வைத்து காய்ச்சிய பால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.





## திரிய பியச வீட்டுத் திட்டம் மூன்று பயனாளிகள் பயன் பெற்றனர்

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் திரிய பியச வீட்டுத் திட்டத்தின் கீழ் 03 வறிய சமுர்த்திப் பயனாளிகள் பயனடைந்தனர்.

காரை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் ஒருவரும் காரை வடகிழக்கு கிராமசேவையாளர் பிரிவில் ஒருவரும் காரை மத்தி கிராம சேவையாளர் பிரிவில் ஒருவருமாக மூன்று பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீதி திருத்துவதற்கு தலா 60,000/- வீதம் வழங்கப்பட்டது.

## காரைநகர் விவசாய குளங்கள் புனரமைக்க பல மில்லியன் நிதி

காரைநகர் விவசாயக் குளங்களைப் புனரமைக்க பல மில்லியன் ரூபாய்களை ஒதுக்கித் தருமாறு காரைநகர் விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலே இக்கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. காரைநகரில் உள்ள மாவட்டைக் குளம் பெரிய குளம், வேரக்குளம், நாகதம்பிரான் குளம், வேதரடைப்புக்குளம் ஆகியவற்றையே புனரமைத்துத் தருமாறு கோரியுள்ளனர்.

இதன் அடிப்படையில் வடக்கின் வசந்தத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்படி ஐந்து குளங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அன்பார்ந்த வாசகர் நெஞ்சங்களுக்கு!

வணக்கம் உலகலாவிய காரைநகர் மக்களின் தொடர்புகளின் பல செய்திகளையும் தகவல்களையும் எடுத்த இயம்பும் வகையில் காரை ஆதித்தியன் வெளியீடு அமைகின்றது.

இந்த செய்தி இதழ் எல்லோராலும் பாதுகாக்கக் கூடிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய வெளியீடாக அமைந்துள்ளது. இவ் வெளியீடு தொடர்ந்து வெளிவர ஓராண்டு சந்தாவை அனுப்பி வைப்பதன் மூலம் எமக்கு உதவி புரிந்தவராவீர்கள்.

- நன்றி -

த.தயாபரன்

## ஆதித்தியன் சந்தா படிவம்

பெயர் : ..............................................................
..............................................................
விலாசம் : ..............................................................
..............................................................
..............................................................
நாடு : ..............................................................
தபால் இல : ..............................................................
தொ.பே : ..............................................................
கையெழுத்து : ..............................................................

ஆதித்தியன் சந்தாவை பின்வரும் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கவும்.
வர்த்தக வங்கி (Commercial Bank)
கணக்கு இல. 8100059334
கொழும்பு - 06 இலங்கை

## வைத்தியர் விடுதி கட்டட வேலைகள் ஆரம்பம்

காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் தங்குவதற்கான வைத்தியர் விடுதி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக சுகாதார திணைக்களத்தினால் சுமார் 80 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கட்டடத்திற்கான ஆரம்ப பணிகள் நிறைவடைந்து கட்டட நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள.

## உலக உலர் உணவு திட்டத்தினூடாக ஏழு வீதிகள் புனரமைக்க ஏற்பாடு

உலக உலர் உணவு திட்டத்தினூடாக சுமார் ஏழு வீதிகள் புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வருட இறுதிக்குள் அதற்கான ஒதுக்கீடும் உணவுப் பொருட்களும் கிடைக்கக்கூடும் எனவும் பிரதேச சபை வட்டாரங்களால் கூறப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம்

- கோவளம் நன்னீர் கிணறு வீதி
- சந்தம்புளியடி வீதி
- குமுழங்குழி வீதி
- விளானை வீதி
- களபூமி வள்ளி சுப்பர் வீதி
- முல்லைப் பிலவு வீதி
- முதலையடிக் கேணி வீதி

போன்ற வீதிகள் அனுமதிக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

## காரைநகர் அபிவிருத்திக்கு 1.5 மில்லியன் ஒதுக்கீடு

காரைநகர் பிரதேச அபிவிருத்திக்கென குறித்து ஒதுக்கப்பட்ட நன்கொடை நிதி மூலம் சுமார் பதினைந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

- வேதரடைப்பு சனசமூக நிலைய கட்டிடம் கட்டுவதற்கு 6 இலட்சம் ரூபா.
- காரைநகர் பிரதேச முன்பள்ளிகளிற்கு தளபாடம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 3 இலட்சம் ரூபா.
- பிரதேச சபை நூலக அபிவிருத்திக்கு 3 இலட்சம் ரூபா.
- பிரதேச சபையின் வடக்கு அலுவலகம் திருத்துவதற்கு 3 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் தேர்வு வழிகாட்டற் பயிற்சித் தேர்வு

காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 4, தரம் 5 மாணவர்களை புலமைப்பரிசில் தேர்விற்கு தயார்படுத்தும் நோக்கில் காரைமத்தி மேம்பாட்டுக் கழகத்தினால் தேர்வு வழிகாட்டற் பயிற்சித் தேர்வு நடைபெற்று வருகின்றது.

கடந்த மாத பயிற்சித் தேர்வு 04 பாடசாலை மண்டபங்களில் நடைபெற்றது. யாழ்ற்ரன் கல்லூரியில் 61 மாணவர்களும், கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் 101 மாணவர்களும், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையில் 42 மாணவர்களும் ஊரி அமெரிக்கன் மிசன் தமிழ்க கலவன் பாடசாலையில் 34 மாணவர்களுமாக 238 மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## காரை ஆதித்தியன் கருத்துக் கணிப்பு 2009

| | | ஆம் | இல்லை | தெரியாது |
|---|---|---|---|---|
| 1. | காரை ஆதித்தியன் தொடர்ந்து வெளிவர வேண்டும் என விரும்புகின்றீர்களா? | ☐ | ☐ | ☐ |
| 2. | காரை ஆதித்தியன் உங்களால் தொடர்ந்து விரும்பிப் படிக்கப்படுகின்றதா? | ☐ | ☐ | ☐ |
| 3. | காரை ஆதித்தியனில் வெளிவரும் செய்திகள், கட்டுரைகள் அனைத்தும் உங்களால் விரும்பி வரவேற்கப்படுகின்றதா? | ☐ | ☐ | ☐ |
| 4. | காரை ஆதித்தியனின் வெளியீட்டு பணிகளில் ஈடுபட்டு உதவியளிக்க விரும்புகின்றீர்களா? | ☐ | ☐ | ☐ |
| 5. | காரை ஆதித்தியன் செய்தி இதழ் அறநெறி மக்கள் பணிக்களில் உதவுகின்றதா? | ☐ | ☐ | ☐ |

தொடர்புகொள்ளவும்: சுவிஸ் தயாபரன், தொ.பே: 0041614211482

# காரைநகர் பொன்னாலைப் பாலம் இருவழிப்பாதையாக அகலமாக்கப்படுவது, வட பகுதியிலேயே இதுவே முதற்தடவை!


காரைநகர் பொன்னாலைப் பாலம் தற்போது இரு வழிப்பாதையாக புனரமைக்கப்பட்டு வருகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் சுமார் 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்படும் இவ் வேலைத்திட்டம், இலங்கையின் வட பகுதியிலேயே இதுவே முதற்தடவையாக அமைக்கப்படும் இருவழிப்பாதை இணைப்புப் பாலமாகும்.

கடந்த காலங்களில் மூடப்பட்ட பாலங்களை மீண்டும் நிர்மாணித்து தற்போது உள்ள பாலங்களையும் புணரமைத்து முன்பு போல ஒன்பது பாலமாக அமைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பாலமும் நீரோட்டம் செல்லக்கூடியதாக அகன்ற, உயரமான துவாரம் உடையதாக அமைக்கப்படுவதனால் தடைப்பட்ட மீன்வளம் பெருக வாய்ப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் குறித்த காலப்பகுதிக்குள் வேலைத்திட்டம் நிறைவுபெறும் பட்சத்தில் தற்போது நடைபெறும் வேலைத்திட்டம் வலந்தலை சந்தி வரைக்கும் அகலமாக்கப்பட்டு சந்தியில் சுற்றுவட்டமும் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டு வருகின்றது.





# கவிதைப் போட்டியில் யாழ்ற்ரன் மாணவன் சாதனை!

யாழ் மாவட்ட தேசிய கலை இலக்கியப் போட்டியில் மாவட்ட ரீதியில் பங்குபற்றிய காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவன் வி. பாலேந்திரன் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். யாழ்ற்ரன் கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் இம்மாணவன் காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த விஸ்வநாதன் தம்பதியினரின் மகன் ஆவார்.



வி. பாலேந்திரன்

காரைநகர் பிரதேச கலை இலக்கியப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் கவிதைப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்ற இம்மாணவன் மாவட்டமட்டத்திலும் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இதனூடாக மாகாண மட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்ட இம் மாணவன் மாகாண மட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். சாதனை படைத்த இம் மாணவன் மென் மேலும் இலக்கியத்துறையில் வளர்ச்சியடைய காரை ஆதித்தியன் வாசகர்களும் இணைந்து வாழ்த்துவோமாக.

# யா/யாழ்ற்ரன் கல்லூரியில் சிறப்புற நடைபெற்ற பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும்

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் கடந்த 19.06.2009 அன்று வெள்ளிக்கிழமை பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி மண்டபத்தில் அதிபர் ந. பரமசிவம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி க. குணராசாவும் (செங்கை ஆழியன்) அவர்களும் பாரியாரும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபைச் செயலாளர் இரா. யோகநாதன், ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அலுவலர் ச. பாஸ்கரன் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.கமலாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் தி. ஏகாம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றதுமேற்படி பரிசளிப்பு விழா அமரர் வை. காசிப்பிள்ளை ஞாபகார்த்தமாக திரு. திருமதி. கந்தசாமி குடும்பத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது.

# சுப்பிரமணியம் வீதிக்கு தார் தில்லையில் கழிவகற்றும் தளம்

காரைநகர் சுப்பிரமணியம் வீதி புனரமைக்கப்படவுள்ளதாக காரைநகர் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. களபூமி ஆலடியில் இருந்து சுப்பிரமணியம் வீதிச் சந்திவரை இவ்வீதி கற்கள் இட்டு தார் இடும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக பிரமான அடிப்படையிலான மூலதன நன்கொடை மூலம் ஆறு இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் காரைநகர் கிழக்கு தில்லை மயானத்திற்கு அருகில் கழிவகற்றும் தளம் அமைப்பதற்காக சுமார் எட்டு இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ் இரண்டு வேலைத்திட்டங்களும் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# பலகாடு, நீலங்காடு, தோப்புக்காடு மக்களை மீள் குடியமர்த்த நடவடிக்கை

கடந்த இருபது வருடங்களிற்கு முன்னர் இடம் பெயர்ந்த பலகாடு நீலங்காடு தோப்புக்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைக்காக மீளக்குடியமரக்கூடியவர்களின் விபரங்கள் கிராம சேவையாளர்களினூடாக சேகரிக்கப்பட்டு வருவதாகவும் தரவுகள் கிடைக்கப்பெற்றதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 349 காரைநகர் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 117 குடும்பங்களைச் சேர்ந்த 349 பேர் 25.09.09 வரை காரை நகரில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த நலன்புரி முகாம்களில்- தங்க வைக்கப்பட்டிருக்கும் பொது மக்கள் கூட்டமாக அழைத்து வரப்பட்டு காரைநகர் தோப்புக்காட்டு குடியிருப்பு பகுதியில் தங்க வைக்கப்பட்டு படையினர் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் உறவினர்களிடம் அந்தந்த உதவி அரச அதிபர்களூடாக ஒப்படைக்கப்படுகின்றனர்.

இந் நடவடிக்கை வாராந்தம் தொடர்ந்து நடைபெற்று வருவதனால் மிக விரைவில் காரைநகர் பொதுமக்கள் மீளக்குடியமர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# காரைநகரில் சமூக சேவைகள் அமைச்சு சுயதொழில் உதவிகளை வழங்கியது

காரைநகர் பிரதேசத்தில் சமூக நலத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுடன் சுமார் நான்கு இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் மற்றும் இதர உதவிகள் வழங்கப்பட்டன.

இவ் உதவிகள் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ என்.டக்ளஸ் தேவானந்தா காரைநகரிற்கு வருகை தந்து வழங்கினார். இதன்மூலம் 66 பயனாளிகள் பயன்பெற்றனர்.

இவற்றுள் கோழிக்குஞ்சு வழங்களிற்கு 07 பயனாளிகளிற்கு 141,400 ரூபாவும் வீட்டுத்தோட்ட பொதிகள் 03 பயனாளிகளிற்கு 8400 ரூபாவும், நீர் இறைக்கும் இயந்திரம் 01 பயனாளிக்கு 36,091.50 ரூபாவும், மூக்குக் கண்ணாடி வழங்க 15 பயனாளிகளிற்கு 36,000 ரூபாவும் வாழை, தென்னை, மாங்கன்றுகள் வழங்க 10 பயனாளிகளிற்கு 22,000 ரூபாவும், பழ மரக்கன்றுகள் வழங்க 19 பயனாளிகளிற்கு 35,720 ரூபாவும், சிறுவன் ஒருவனுக்கு சைக்கிள் வழங்க 9,261.50 ரூபாவும், சிறுவர்களிற்கு 03 மாதங்களிற்கு பால் வழங்க 53,500 ரூபாவும், நுளம்பு வலை வழங்க 07 பயனாளிகளிற்கு 8750 ரூபாவும், பசுமாடு வழங்க 36,700 ரூபாவும் பாடசாலைக்கு சூரிய மின்கலம் வழங்க 30,100.25 ரூபாவும் வழங்கப்பட்டது.



காரை நகர் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தர் அலுவலகத்திற்கான கட்டிடத்திற்க உதவி அரச அதிபர் அடிக்கல் நாட்டுவதனை படத்தில் காணலாம்

காரைநகர் பிரதேச செயலகத்திற்கென ஐம்பது மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. கட்டடத்தின் கட்டுமான



# வேகமாகப் பரவி வரும் பன்றிக் காய்ச்சல்

பன்றிக் காய்ச்சல் என்பது ஆர்த்தோமிக்கோவிரிடே குடும்பத்தைச் சேர்ந்த தீநுண்மத்தினால் வரும் ஒரு உயிரிழக்கும் நோயாகும். இந்நோய் இன்புலியன்சா A யினால் மிக அதிகமான அளவிலும் இன்புலியன்சா C யினால் மிக அரிதாகவும் தொற்றுதல் ஏற்படுகிறது. இந்நோயை பரப்பும் தீ நுண்மம் மிகவும் அரிதான மரவு அணு தொகுதியை பெற்று இருப்பதால் இதைக் கண்டு ஆராய்ச்சியாளர்கள் வியப்படைந்துள்ளார்கள். இந்நோய் பன்றிகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவுகிறது. மெக்சிக்கோ அமெரிக்கா ஆசிய நாடுகளில் இதுவரை 149 பேர் பலியாகியுள்ளனர். இந்நோய் ஐரோப்பாவிற்கு பரவியுள்ளது. இந்தியாவில் பன்றிக்காய்ச்சல் பரவலில் இதுவரை இறந்தோர் எண்ணிக்கை 72 ஆக உயர்ந்துள்ளது.



அறிகுறிகள்: சுரம், தலைவலி, உடற்பலவீனம், தொண்டைப்புண், இருமல், பசியின்மை, வயிற்றுப் போக்கு வாந்தி போன்றவை இவற்றின் அறிகுறிகளாகும்.

இவை காணப்படும் பட்சத்தில் மருத்துவரை அணுக வேண்டும். கூடிய வரை நோய் தாக்கப்பட்ட நபர்களிடமிருந்து விலகி இருப்பது. நுகர்மூடி அணிதல் சுத்தமாக இருத்தல், கைகளை நன்கு கழுவுதல், இருமும் போதும் தும்மும் போதும் கைக்குட்டைகளை பாவித்தல். தற்போதைக்கு தடுக்கும் முறைகள் என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. ஐரோப்பாவில் கை கொடுத்து வரவேற்பதை தவிர்த்துள்ளார்கள். கூடவே கிட்ட (அண்மித்து) நின்று கதைப்பதை பேசுவதை தவிர்த்து சற்றே தூர நின்று செயற்படுதல் தற்காப்பு என கூறி வருகின்றனர். இப் பன்றிக் காய்ச்சல் இன்று நேற்று தொடங்கியதல்ல. 1918 இல் பரவியதாகவும் அப்போது 50 மில்லியன் மக்கள் இறப்பதற்கு எச் 1 என் 1 வகை தீ நுண்மம் காரணமாயிருந்ததாக கூறப்படுகிறது.



தற்போது பரவி வரும் பன்றிக் காய்ச்சலை உருவாக்குவது. ஒரு புதிய எச் 1 என் 1 தீ நுண்மம் ஆகும்.

### உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு

பன்றிக் காய்ச்சல் கொள்ளை நோயாக அறிவித்துள்ளது. இந்நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதன் காரணமாக இவ் அறிவிப்பு ஐ.நா. சுகாதார நிறுவனத்தால் விடுக்கப்பட்டுள்ளது.

74 நாடுகளில் 28,000 பேருக்கு தொற்றியுள்ளதாக புள்ளிவிபரம் வெளியிடபட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதும். அது குறித்து விழிப்புணர்வு வேலைகளில் ஈடுபடுவதும் உலக சுகாதார நிறுவாகத்தின் பணியாகும் என்று ஐ.நா. கூறியுள்ளது.

பன்றிக் காய்ச்சல் காரணமாக சுவிஸில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது. சுவிஸிலுள்ள யூரி (ருசஎ) மாநிலத்தில் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதன் விளைவாக சிறுவர் பராமரிப்பு பாடசாலையும் சாதாரண பாடசாலையும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (30.09.2009)




# நீதிமன்ற உத்தரவு

சிதம்பர நடராஜர் கோவில் நிர்வாகம் தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த 2006ம் ஆண்டு அற நிலையத் துறை ஆணையாளரின் பரிந்துரைப்படி கோயில் நிர்வாகத்திற்கு செயல் அதிகாரியை நியமிக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதை எதிர்த்து தீட்சகர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். இந்த வழக்கை விசாரித்த நீதி மன்றம் நடராஜர் கோவில் நிர்வாகத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் வகையில் செயல் அதிகாரியை நியமித்து தமிழக அரசு பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

# உலகத் தமிழ் மாநாடு

2010ம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு 9வது தடவை இந்தியா தமிழ் நாட்டிலுள்ள கோவையில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். சென்னையில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைர் காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் கூட்டு மாநாட்டில் பேசிய அவர் இவ் அறிவித்தலை தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உலகத் தமிழ் மாநாடு அப்போது இருந்த தமிழக முதல்வர்களால் நடாத்தப்பட்டது போலவே தனது காலத்திலும் நாடாத்த வேண்டும் என பல தமிழ் ஆர்வலர்கள் பத்திரிகையாளர்கள் புலவர்கள், அயல்நாட்டிலுள்ள தமிழ் விற்பன்னர்கள் போன்றோர் வற்புறுத்தி வருவதாகவும், எனவே அடுத்த ஆண்டு இம் மாநாடு நடாத்தப்படவுள்ளது எனவும் கூறினார்.



# அதிகார வெறி அதிக காலம் உயிர் வாழ்வதில்லை

போர்க்கால கஷ்டங்கள் பற்றி ஒரு வயதான பாட்டியிடம் கேட்டபோது. 2ம் உலக யுத்தகாலத்தில் ஹிட்லருக்கு ஆதரவு கொடுக்காததிற்காக நான் பன்றிகள் வாழும் சேற்றுப் பகுதியில் சித்திரவதைக்கு உட்பட்டேன். என்னை ஒரு பெண் என்றும் மதிக்கவில்லை. ஆனால் அவர்கள் வெறி அதிக காலம் நீடிக்கவில்லை. பின்னால் நான் மிக சந்தோஷமாக வாழும் நிலமையை அடைந்தேன் என்றார்.

(ஆதித்தியன் நேரடியாக பிரான்சின் எல்லையில் சுவிஸின் எல்லையிலும் வாழும் இப்போது ஓய்வு பெற்றிருக்கும் திருமதி. தொனியிடம் உரையாடிய போது)

# 20-06-2009 அன்று அகதிகள் தினம்

உலகெங்கும் போர், யுத்தம், காரணமாகவும், துன்பங்கள் துயரங்கள் காரணமாகவும் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள லட்சக் கணக்கான மக்கள், அகதிகளாக இடம்பெயர்ந்து சொல்லொனா துன்பங்களுக்கு உட்படுகிறார்கள் என்று ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அண்டோனியோ குட்டெரெஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

உலகில் பெரிய அளவில் நிச்சயமற்ற கழல் நிலவும் இன்றைய சூழ்நிலையில் மிக அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் இடம்பெயர்ந்துள்ளவர்களும் அகதிகளும் தான் என ஐ.நா. சபை கூறியுள்ளது.

மோதல்கள் காரணமாகவும் சட்டத்துக்கு அப்பாற்பட்ட தண்டனைகள் காரணமாகவும் உலக அளவில் இடம்பெயர நேர்ந்தவர்களின் எண்ணிக்கை 4 கோடியே இருபது லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது போன்று இலங்கையில் இடம்பெயர்ந்து வாழும் அகதிகள் குறித்தும் ஐ.நா. கூடிய கவனம் செலுத்தி வருகிறது.





# தில்லியில் துயரச் சம்பவம்


இந்திய டெல்லி பள்ளி மாணவி வெய்யிலில் நிற்கச் சொல்லி மரணம் வீட்டு பாடத்தை செய்யாததற்கான தண்டனையாக கடும் வெய்யிலில் நிற்க வைக்கப்பட்ட 11 வயது மாணவி மரணமான சம்பவம் தொடர்பாக இந்தியாவில் பள்ளிக்கூட தலைமை ஆசிரியரும் மற்றுமொரு துணை ஆசிரியரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பல மணி நேரம் வெய்யிலில் நிற்க வைக்கப்பட்டதை அடுத்து மயங்கி விழுந்த அந்த சிறுமி வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட பின் மரணம். இது ஒரு துயரச் சம்பவம் என்று இந்தியாவின் பெண்கள் மற்றும் சிறார்கள் மேம்பாட்டுக்கான அமைச்சர் விபரித்துள்ளார்.

# ரொனால்டோவுக்கு அதிக விலை

உலகின் முன்னணி கால்பந்து விளையாட்டு வீரர்களில் ஒருவரான கிறிஸ்டியானோ ரொனால்டோவை இதுவரை இல்லாத அளவுக்கு சுமார் 130 மில்லியன் டாலர்கள் அளவான பணத்துக்கு ரியல்மட்ரிட் அணிக்கு விற்க தாங்கள் தயாராக இருப்பதாக மான்செஸ்டர் யுனைட்டட் அணி தெரிவித்துள்ளது.

போர்த்துக்கல் நாட்டில் பிறந்தவரான ரொனால்டோ கடந்த ஆண்டு தான் ரியல் மட்ரிக் அணிக்காக விளையாட விரும்புவ தாகவும் அது தனது கனவு என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் அப்போது அதற்கு உடன்படாத நிலையில், மான்செஸ்டர் அணி தற்போது கிறிஸ்டியானோ ரொனால்டோ விற்கப்படுவதற்கு இணங்கியுள்ளது.




# நில நடுக்கம்

01.10.2009 அன்று இந்தோனீசியாவின் தீவான சுமத்திராவில் புதன் அன்று ஏற்பட்ட பூகம்பத்தினால் 520க்கு அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 7.6ரிக்டர் அளவில் ஏற்பட்ட அதிர்வினால் படாங் நகர் தரைமட்டமாகி யுள்ளது. நூற்றுக் கணக்கானோர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். வெறுங்கையோடு இடிபாடுகளுக் கிடையில் உள்ள நண்பர்களை உறவினர்களையும் தேடி வருகின்றார்கள்.





(ஏற்கனவே நில நடுக்கம் சம்பந்தமான கட்டுரை ஆதித்தியனில் பிரசுரமானது குறிப்பிடத்தக்கது)

அதன் தாக்கம் தற்போது அப்பகுதியில் தொடர்ந்து நிலவி வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




அன்புள்ள பேரனுக்கு.

**சிதம்பரத்தானும் நீதிமன்றில்**

அன்புள்ள பேரன் குடும்பத்திற்கு நான் நலம் உங்கள் நலமறிய ஆவல். நானும் கன நாள் கடிதம் போடவில்லை. ஏனென்டா இங்கு ஊரில நடக்கிற நடப்பைப் பார்த்தால் என்னத்தை எழுத என்டு எழுதவில்லை.

மேலும் நான் என்ன சொல்றன் என்டால் காரைநகர் கோயில்கள் எல்லாம் நீதி மன்றத்திற்கு கொண்டு போறாங்கள். இது எவ்வளவு அநியாயம்? எங்களிற்கு ஐயனாரும் சிவனும் தான் நீதிபதிகள். இறுதியில் ஆண்டவனின் தீர்ப்புத்தான் இறுதியானது. உறுதியானது. ஆனால் படிச்சவங்கள் என்டு சொல்லுறவங்கள் கொஞ்சப்பேர் திருப்பணிகளில் தங்கள் பெயர்களும் வரவேண்டும் என்று வழக்குப் போடுறாங்கள். நான் என்னத்தைச் செய்ய? காலம் கலிகாலமடா.

யாரென்றாலும் பரவாயில்லை இங்கை இருக்கிற நாங்கள் கோவில் கும்பிட்டால் போதும். அதனால் நாங்கள் நிம்மதியாக கும்பிட கோயில் ஒழுகாமல், ஓடாமல் இருக்க வேண்டும். ஏனோ தெரியாது திருப்பணி செய்தவங்களையும் செய்யவிடாமல் தானும் செய்யாமல் தடுத்து வெச்சிருக்கிறாங்கள். எது சரியோ, பிழையோ இந்த கோவில் விடயத்தில் தவறு செய்தவர்கள் யாரென்றாலும் தண்டனை பெற வேண்டும்.

ஊருல இருக்கிற எங்களுக்குத் தான் தெரியும் கோயிலின் அருமை. ஒரு மன நிம்மதிக்கு ஐயனாரே ஆண்டவரே என்று கும்பிடுவோமென்டால் இவங்கள் விட்டால்தானே. யார் தான் என்ன செய்ய முடியும் படிச்சவங்களே இப்படி என்டால்?

சிலவேளை உங்களுக்கு நான் இப்படி கடிதம் எழுதினது அறிஞ்சாலும் வழக்கு போட்டுப் பார்ப்பாங்கள். நீயும் பிள்ளைகளும் கொழும்புக்கு வாறன் என்டு சொன்னனீ. அப்படி வந்து கண்டால் படிச்சவங்களிற்கு விளங்கப்படுத்து. உன்ர சொல்லையும் கேட்பாங்களோ தெரியாது. சரி சரி இவங்களைப் பற்றி நாங்கள் ஏன் அலட்டுவான் இவங்களுக்கு பேராசைதான். யாரும் செய்ய நாங்களும் பெயர் எடுக்க வேண்டும் என்று ஆசை. இதற்கு யார் தான் என்ன செய்ய. ஆனால் எனக்கு ஒரு நம்பிக்கை நீதி மன்றங்களின் தீர்ப்பினை விட ஆண்டவன் தீர்ப்பு கட்டாயம் இருக்கும். கடைசியாக குரங்கு அப்பம் பங்கிட்டது போல ஆலயங்கள் நீதிமன்றங்களில் நிர்வகிப்பில் செல்வதனை தடுக்க முடியாது போய்விடும். எதுவும் ஆண்டவன் விட்ட வழி. பொறுத்திருந்து பார்ப்பம். சொல்லுறதைச் சொல்லிப்போட்டன் இரு பகுதிகளும் சமாதானமாகச் சென்றால் அடியார்களின் மனதில் ஆனந்தம் குடிகொள்ளும். சரியடா இதுதான் ஊர்ப்புதினம் உனது சுகத்திற்கும் விரைவில் பதில் போடு.

இப்படிக்கு
அன்பு பேரன்
''கொம்பன்''

# கலைஞர்களிற்கு பட்டம் வழங்கி கௌரவித்தது கிழவன் காடு கலாமன்றம்

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் பயிற்றப்பட்ட மாணவனின் (செல்வன் மோகனலிங்கம் சஞ்ஜீவன் அவர்களின்) மிருதங்க அரங்கேற்றம் கடந்த 10-05-2009 அன்று யாழ் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. இம் மிருதங்க அரங்கேற்றத்திற்கு அரும்பாடுபட்ட மிருதங்க ஆசிரியர் எம். சிதம்பரநாதனிற்கு "லயஞானசுரபி" என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது. இவரது பட்டத்தினை மன்றத்தின் சார்பில் (உதவி அரச அதிபர் இ.த. ஜெயசீலன்) பட்டம் வழங்கி கௌரவித்தார்.

இம் மிருதங்க அரங்கேற்றத்திற்கு பாட்டுப்பாடிய காரை கணேசனின் புதல்வியும் யாழ் பல்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளருமாகிய செல்வி பரமேஸ்வரி கணேசனிற்கு மன்றத்தினால் "ராக சுரபி" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மன்றத்தின் சார்பில் வலிகாம வலய கல்விப் பணிப்பாளரும் அவரது பாரியாருமான திரு.திருமதி விக்கினேஸ்வரன் தம்பதியர் வழங்கி கௌரவித்துள்ளனர்.



# ஐந்நூறு ஆண்டுகளின் பின்னர்

## வியாவில் ஐயனார் ஆலயத்தில் கொடியேற்றம்!

ஈழத்திலே புராதன பழமை வாய்ந்த வரலாற்று ஆலயமான வியாவில் ஐயனார் ஆலயத்தில் சுமார் 500 ஆண்டுகளின் பின்னர் கடந்த 12-07-2009 ஆண்டு கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து எட்டு நாட்கள் சிறப்பாக மகோற்சவம் நடைபெற்ற எட்டாம் நாள் 19ம் திகதி புதிய தேர் வெள்ளோட்டத் திருவிழா நடைபெற்று 20ம் திகதி தேர்த்திருவிழாவும், 21ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 500 ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற இப் பெருந்திருவிழாவில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

ஐயனார் ஆலய கொடியேற்ற, தேர்த்திருவிழா படங்கள்





மிருதங்க அரங்கேற்றத்தினை பேராசிரியர் வே. தர்மரட்ணமும் பாரியாரும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வித்துவானை கௌரவிப்பதனையும் மிருதங்க பாட்டு கச்சேரியையும் படங்களில் காணலாம்.


# தினமும் யோகா மனிதனுக்கு இன்றியமையாதது


திரு. நல்லதம்பி





திரு. விசாகன்



யோகா என்பது விடுபடல் என பொருள்பட்டாலும் மனச் சமநிலை மனதை அங்கும் இங்கும் அலைய விடாமல் ஒரு நிலையில் பொருந்தச் செய்வதே யோகா. மனம் எப்போது நிலையற்று அலைகிறதோ, அப்போது மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். தன் மனதை வெல்ல வேண்டும். இருக்கும் இடத்திலேயே சிறிது நேரம் சிந்தையை நிலைநிறுத்த நம் முன்னோர் தந்த வரம் தான் தியானம். இந்த தியானத்தை மேலும் வலுப்படுத்த உதவுவது யோகா. யோகாவை மேலும் சிறப்பிக்க இந்த நேர்காணல் நிகழ்வு பயனுள்ளதாக அமைகிறது. அந்த வகையில் இம்முறை கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள யோகா பயிற்சி பட்டறையில் பயிலும் மாணவன் திரு.விசாகன் அவர்களிடம் யோகா பற்றி நேர் கண்ட போது........!

திரு.விசாகன் அவர்கள் கொழும்பு றோயல் கல்லூரி உயர்தர வகுப்பில் கல்வி பயிலுகிறார்.







**முதலில் எங்கு கற்றீர்கள்?**

அரவிந்தர் ஆச்சிரமம் வெள்ளவத்தை.

**எவ்வளவு காலம்?**

2 வருடம்

**அதன் பலன் எப்படி?**

அமைதியான வாழ்வு, பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் தைரியம், வேலைகளை பொறுப்பேற்கும் பண்பு, தலைமை தாங்கும் மனோ நிலை இவற்றை நான் பயில அல்லது அனுபவத்தில் கொண்டுவர யோகா பயிற்சி உதவியது. உடலைக் காட்டிலும் மனதுக்கு பயிற்சி கொடுக்கும் சக்தி வாய்ந்தது யோகா.





**யோகாவிற்கு முன் எப்படி ? யோகாவிற்கு பின் எப்படி?**

முந்தைய நிலை ஒடுங்கிய குறுகிய வாழ்க்கைக்குள் அமர்த்தப்பட்டேன். தற்பொழுது மிகக் கூடிய முன்னேற்றம் ஓர் புதிய தெம்பு உற்சாகமான நிலை நல்ல முன்னேற்றம் என்று தான் கூற வேண்டும். சக மாணவர்களுடன் சகஜமான முறையில் வாழ உதவி செய்துள்ளது யோகா.



**உங்களுக்கு எப்படி யோகா அறிமுகமாகியது?**

சக மாணவர்களிடம் இருந்து அவர்களிடம் காணப்பட்ட உற்சாகம், சுறுசுறுப்பு அமைதியான பார்வை இவையே என்னையும் யோகாவில் ஈடுபடச் செய்தது.

**விசாகன் நீங்கள் புலம்பெயர் மாணவர்களுக்கு கூற விரும்புவது?**

யோகா........... உலகத்தாருக்கு, சிறந்த வாழ்க்கைக்கு மிக மிக நன்மையளிக்கக்கூடியது. யோகாவில் பல வகை உண்டு ஒன்றை தெரிவு செய்து அதை சிறந்த முறையில் கற்றுக்கொள்வது நல்லது. திரு. விசாகன் அவர்களே! மீண்டும் இன்னுமொரு நேர்காணலில் சந்திப்போம்.

தொடரும்......

## தொடர் உரையாடல் ........

## ஊருக்கு திரும்புதல் சாத்தியப்படுமா.......??



02-03-2009 இரவு 8.00 மணிக்கு காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தியாகராசா அவர்களிடமிருந்து ஓர் நேர்காணல்!

கம்பஹா பிரபல வர்த்தகர் 1956 இல் இருந்து வர்த்தகம் செய்து வரும் இவர் 52 வருடங்கள் தொடர்ந்து சேவையாற்றி வருகிறார். முன்னாள் இந்து கலாச்சார கொழும்பு மாவட்ட எம். பி. அமரர். திரு. தி. மகேஸ்வரனின் தகப்பனார் ஆவார்.

கேள்வி : காரைநகர் பற்றிய உங்கள் அபிப்ராயம் ?

பதில் : கட்டுக்கோப்பான கலாச்சாரம் கூறிய கலை அம்சங்கள் நிறைந்த ஊரும் பெயர் போன வர்த்தகர்கள் வாழும் ஊரும் ஆகும்.

கேள்வி : காரைநகர் மக்கள் பற்றிய உங்கள் கருத்து ?

பதில் : கற்றவர்கள் முதல் வர்த்தக துறை வளர்ந்துள்ள மக்கள் சைவம், தமிழ் பற்றுக் கொண்டவர்கள். எங்கு சென்றாலும் திறமையுடன் செயல்படும் திறமை மிக்கவர்கள்.

கேள்வி : உங்கள் இலட்சியம் யாது ?

பதில் : எல்லோரும் நல்லாய் இருக்க வேண்டும். நான் நல்லாய் இருக்கின்றேன். எனது சொந்த முயற்சியின் பால் நான் வாழ வேண்டும் என வாழ்கிறேன். எண்பத்தொரு வயதாகியும் கடவுள் அருளால் நிம்மதியாக வாழ்கின்றேன்.

கேள்வி : ஊருக்கு திரும்புதல் பற்றி.......?

பதில் : எனக்கு இலங்கையில் எப்பகுதியிலும் வாழும் ஆற்றல் உள்ளது. எங்கும் சிவமயம் போல........ ஆனால் எனக்கு ஊர் பற்றுதல் உண்டு.

கேள்வி : உங்கள் மகன் மகேஸ்வரன் பற்றி.........?

பதில் : என் மகனை நினைத்தால் எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. எந்த பொருளிலும் நட்டம் என்பதை தர மாட்டான், கொடுத்து வைத்த பையன். இடையில் சென்றது தான் மனவருத்தம் காரைநகருக்கு செய்ய வேண்டியதை ஆகக் கூடுதலாக செய்துள்ளான். "பெருமை"

ஆனால் இறுதியாக ............... ஆனான ஆக்கல்லாம் கைலாயம் அனுப்பிய (பாவப்) பெருமை எமக்குண்டு.

மீண்டும் அடுத்த இதழில் தொடரும்.......

## நேர்காணல்



(24-02-2009) அன்று கொழும்பு வெள்ளவத்தை யோகாசனப் பயிற்சி பட்டறையில் நேர்காணல் இடம்பெற்றது. காரைநகர் உ.அ பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராக இருந்து ஓய்வு பெற்ற அவரிடம் (சொந்த ஊர் சுழிபுரம்) காரைநகர் பற்றி கேட்ட போது?

மிக மிக அருமையான இடம் கடற்காற்று நெல்வயல் உழைக்கும் கரங்கள், இறை பக்தி இப்படி பலவும் கொண்ட ஓர் ஊர் தான் காரைநகர் என்றார். மேலும் தெய்வீக பூமி கோவில்களுக்கு குறைவில்லை எப்படி பணத்தை சேர்த்தாலும் அதை செலவு செய்யும் தன்மையும் புரிந்து வைத்திருக்கும் ஊர் காரைநகர்.

மேலும் ஊர்பற்றி கூறுகையில் நாம் கால மாற்றத்துக்கு உட்பட்டுள்ளோம். ஆதலால் கூடிவாழ்தல் அல்லது சேர்ந்து செயல்படல் அவசியம் என்பதை சுட்டி காட்டினார். வில்லங்கத்துக்குள் விசயம் உண்டு. எங்களுடன் இறைவன் உண்டு மகான்களை சந்திப்பது சிறப்பு.

-நன்றி-



காரை நகர் உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் மாடிக் கட்டிடம்

# உயிர் வாழ ஓர் இடம்

கடந்த இதழின் தொடர்ச்சி ......

சந்தோஷ் உன்னத்தான்பா தேடுறன் திடீர் என்று தேவகியுடைய தாத்தாவுக்கு கடுமையாம் அதால நானும் மாமாவும் கிளிநொச்சிக்கு போட்டு ஒருகிழமைக்குள்ள வந்துவிடுவோம் நீதாப்பா தேவகிய பார்த்துக்கவேணும் அவள் சின்னப்பிள்ளை மாதிரி நடந்துக்குவாள் சாப்பாட்டுக்கு அடம்பிடிப்பாள் அதால நான் அவளுக்கு பிடித்த பலகாரங்கள் செய்து வைத்திருக்கிறன் உனக்கு வேண்டியதெல்லாம் எடுத்து வைச்சிருக்கிறன் நீங்க ரெண்டு பேரும் பிரச்சனையான நேரத்தில வெளியேபோக வேண்டாம் பதுங்கு குளி இருக்கு உடனே அதுக்க போய் இருந்துவிடுங்க தம்பி நீ வந்தபிறகு பிரச்சனை இன்னும் வரவில்லை எப்ப எங்க குண்டு விழுமோ தெரியாது செல் விழுந்தால் பெரிய பயங்கரம் நீங்க விளையாட்டுத்தனமாக இருந்து விடாமல் கவனமாக இருங்கோ.

அதெல்லாம் நாங்க பார்த்துக்கொள்கிறோம் நீங்கள் நல்லபடியாக போட்டு வாங்கோ அத்தை சமயலும் பிரச்சனை இல்லை.

ஆ மறந்து போனேன் தம்பி தேவகி சமைக்கமாட்டாள் நான் பக்கத்தில சிவகாமிப்பாட்டியிடம் சொல்லி விட்டு போறன் அவ உங்களுக்கு சமைத்து கொண்டுவந்து தருவா.

அத்தை சமயல் எனக்கு கைவந்தகலை உங்களவிட நான் நல்லாகவே சமயல் செய்வேன் அதனால் நீங்கள் ஒன்றும் கவலைப்படாமல் போய்சீக்கிரமாக வாங்கோ தேவகி உங்களைப் பிரிந்து இருந்ததில்லை அதனால எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்திடுங்கோ.



தேவகியும், சந்தோசும் அவர்கள் இருவரையும் பஸ் ஏற்றி கிழாலிக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்கு திரும்பி வந்துவிட்டார்கள்.

சுந்தரமூர்த்தியும், ஜானகியும் கிழாலி வந்ததும் வள்ளம் ஏற நம்பர் எடுத்துவிட்டு மக்கள் திரளாக வந்து கொண்டிருந்தனர் எல்லோரும் நம்பரின்படி ஒழுங்காக இருக்கும் இடத்தில் இருந்தனர் அவர்களுடன் இவர்களும் போய் தங்கள் நம்பருடன் இருந்தனர் காலை ஆறு மணியில் இருந்து இரவு ஏழுமணிவரை அந்த வேகாத வெயிலில் காய்ந்து கிடக்கவேண்டி இருந்தது ஏழு பத்து இருக்கும் ஜானகியும் சுந்தரமூர்த்தியும் தங்களுடன் வள்ளம் ஏற வந்தவர்களுடன் பேசியபடி தங்களை ஏற்றிச்செல்ல இருக்கும் வள்ளத்தில் ஏறினார்கள் இப்படியே எத்தனை காலத்துக்குதான் நாங்கள் கஷ்டப்படப்போகிறோமோ தெரியாது. என்றார் வள்ளத்தில் ஏறிய பெரியவர்.

வள்ளம் நடுக்கடலில் போனவண்ணம் இருந்தது. கடல் உப்புத்தண்ணீர் முகத்தில் அள்ளி அடித்தது உவர்ப்பு தாங்க முடியாமல் ஆ ஊ என சினத்தபடி இருந்தார் அந்தப்பெரியவர். என்னடா தம்பி குளிர்தாங்கமுடியாமல் இருக்கு பிள்ளைகளோட கதைக்கவேணும் பிள்ளைகளுக்கு கலியாணம் கூடிவந்திருக்கு காசு ஒழுங்கு படுத்த வேணும் இந்த சீதனத்தொல்லை நாட்டுப் பிரச்சனையை விட மோசமாக இருக்கு நானும் நாலு பெட்டப்பிள்ளைய பெத்துப் போட்டு ஆண் பிள்ளை ஒருவன் கைய எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் இந்த வயதுபோன காலத்தில் நிம்மதியாக கண்ண மூடுற வயதில இப்படி கஷ்டப்படவேண்டி இருக்கு.

ஏதோ வெளிச்சம் தெரியுது யார் வள்ளம் வருகுது என்று தெரிய வில்லையே கொஞ்சம் அமைதியாக இருங்க ஏதோ சத்தம் கேட்குது ஓமடாதம்பி வள்ளத்த திருப்புங்கப்பா என்னமோ ஏடாகுடமாக நடக்கப்போகுது திருப்பு வள்ளத்த திருப்பு என்றால் ஒரு வயது வந்த அம்மா பயந்த வண்ணம்.

ஒரு பிரச்சனையும் வராது நீங்கள் பயப்படாம இருங்கோ நான் பார்த்துத்தான் போவேன்.

வெடிச்சத்தம் மிக அண்மையில் கேட்டதும் எல்லோரும் அதிர்ச்சியாகிவிட்டனர் எல்லாம் கண்மூடி முளிக்கமுதல் நடந்துவிட்டது வந்தது நேவிக்கப்பல்.

சுந்தரமூர்த்தியும், ஜானகியும் மகளை நினைத்து கண்ணீர் விட்டனர். வயதானவர் தன் நாலு பிள்ளைகளையும் நினைத்து கண்ணீர்விட்டார் எதிரில் வந்த கப்பலில் இருந்து வந்த குண்டு ஜானகியின் மார்பில் பதிய ஜானகி அம்மா தேவகி என்றவண்ணம் கடலில் வீழ்ந்தாள் சுந்தரமூர்த்தி மனைவியை காப்பாற்ற பாய்ந்தவர் கடலுடன் சங்கமித்து விட்டார் பெரியவர் அதிர்ச்சியில் மரணித்தார் எல்லோர் உயிரும் கடலுடன் கலந்தது.

(தொடரும்.......)

## தீக்கரை முருகன் ஆலய தேர்த்திருவிழாக் காட்சிகள்







நீங்கள் விரும்பியபடி சகல விதமான பிரிண்டிங், கலண்டர், டயரி, டைப் செட்டிங், மற்றும் பிளேட் மேக் என்பன செய்து தரப்படும்


Print House
QUALITY OFFSET PRINTERS

தொடர்புகளுக்கு : இல. 308, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு 13.
தோ.பே: 0777555327, 011-2436344 தொலைநகல்: 011-2436344



கருங்காலி முருகன் ஆலய வீதி புனரமைப்பிற்காக போடப்பட்டிருக்கும் கற்குவியல்கள்

# இராசி பலன்கள்



## 2009-10-04 தொடக்கம்

**- தொகுப்பு - சாஸ்திரி சின்னத்தம்பி -**


மேடம்

வியாபாரிகள் இலாபமடையும் காலமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலை மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. பொதுவாக சுமாரான பலனைத் தரும் காலமாகும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். சனி நன்மை கிரகம். அருகிலுள்ள ஐயனார் வழிபாடு சிறந்த பெறுபேற்றை தரும்.


இடபம்

இவ் ராசியன்பர்கள் பொதுவாக சிறப்பை பெற்று வாழ்வார்கள். வியாபாரிகள் கூடிய இலாபம் ஈட்டும் காலமாக இருப்பினும் நோய் நொடிகள் வந்து போகாது அதி சிரத்தையாக இருக்க வேண்டும் மாணவர் கல்வியில் வெற்றி பெறுவர். சமூக சேவையில் ஈடுபடுபவர்கள் கூடிய பாராட்டை பெறுவர். வியாழன் நன்மை தரும் கிரகம். ஈழத்துச் சிவன் வழிபாடு சிறந்த பரிகார வழிபாடாகும்.


மிதுனம்

இவ் ராசியன்பர்கள் பல பொருளாதார நெருக்கடிகளில் அவஸ்தைப்பட்டாலும் சமாளிக்கும் திறமை வாய்ந்தவர்களாக காணப்படுவர். வியாபாரிகள் மருத்துவத்திற்கான அதிக பணம் செலவு செய்வர். மாணவர்கள் கல்வியில் சுமாரான நிலையில் காணப்படுவர். சமூக சேவையில் உள்ளவர்களும் கடுமையாக உழைப்பினும் நன்மை கிட்டாது கவலையடைவர். ராசியான ராகு நன்மையளிக்கும். அருகிலுள்ள மணற்காட்டு அம்மன் சிறந்த பரிகார தெய்வ வழிபாடு.


கடகம்

இவ் ராசியன்பர்கள் இதுவரை தடைப்பட்டு வந்த சகல காரியங்களும் சுகமாக நிறைவு பெறும் புதிய முயற்ச்சியில் ஈடுபடுவர். வியாபாரிகள் முன்னெப்போதும் இல்லாத உற்சாகத்துடன் செயல்படுவர். மாணவர்களும் சிறந்த பலனை பெறுவர் சுக்கிரன் சிறந்த ராசியான கிரகம். அருகிலுள்ள சிவகாமி அம்மன் வழிபாடு சிறந்த பலனை தரும்.


சிங்கம்

இவ்ராசியன்பர்களுக்கு எதிர்பாராத வரவுகள் வந்து சேரும். தீராமல் இருந்த நோய்கள் தீரும் புதிய உதவிகளும் வந்து சேரும். வியாபாரிகள் சற்று நிதானமாக செயற்படல் அவசியம். மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனம் தேவை எதிர்பாராத பல தொல்லைகள் வந்து போகும். எச்சரிக்கையுடன் செயற்படல் அவசியம். கேது நன்மை தரும் கிரகம். மருதடி விநாயகர் வழிபாடு சிறந்தது.


கன்னி

இவ் ராசியன்பர்களே! இதுவரை இருந்து வந்த மனக் கசப்புககள் நீங்கி புதிய முயற்ச்சியில் ஈடுபடுவர் வியாபாரிகள் சிறந்த நற்பலனை அடைவர் சமூக சேவையாளர்கள் பலரது பாராட்டுதல்களுக்கு உட்படுவர். மாணவர்கள் கல்வி மேல் தங்கியிருப்பர். போட்டிகளும் வந்து சேரும் செவ்வாய் நன்மை தரும் கிரகம். அருகிலுள்ள கிழவன்காடு முருகன் வழிபாடு சிறந்தது.


துலாம்

இவ் ராசியன்பர்கள் மிகுந்த மன மகிழ்ச்சியுடன் காணப்படுவர். கடந்த கால முயற்சியின் பலன்கள் அனைத்தும் நன்மையில் வந்து முடியும். வியாபாரிகள் எதிர்பாராத தொல்லைகளுக்கு உட்படுவர். திடீர் வரவுகள் வந்து சேரும். மாணவர்கள் நன்மை அடைவர். சந்திரன் சிறந்த நன்மையளிக்கும் கிரகம். அருகிலுள்ள மடத்திகரை அம்மன் வழிபாடு சிறந்தது.


தனுசு

இவ் ராசியானவர்கள் சிறந்த பலனை பெற்றாலும் தேவையற்ற பல பிரச்சினைகள் வந்து போகும். கூடுதல் கவனத்துடன் காரியங்கள் செய்தல் நன்மை தரும். வியாபாரிகள் புதிய முயற்சியில் வெற்றியடைவர். மாணவர்கள் கல்வியில் மந்தகதி ஏற்படினும் பாராட்டை பெறுவர். சமூக சேவையாளர்கள் பொதுவாக பாராட்டை பெறுவர் சூரியன் நன்மையான கிரகம். அருகிலுள்ள ஆழன்கன்று வைரவர் வழிபாடு சிறந்தது.


மகரம்

இவ் ராசியானவர்கள் முன்கோபம் உள்ளவர்களாக காணப்படுவர் தீராத தீமைகளை அடிக்கடி கேட்பர். நல்ல முயற்ச்சி கூடிய பலனைத் தரும். வியாபாரிகள் சுமாரான பலனைப் பெறுவர். திடீர் அதிர்ஷ்டத்தின் மூலம் பணம் பெறுவர். மாணவர்கள் கல்வியில் மிகுந்த அவதானம் தேவை பல போட்டிகள் வந்து போகும். பொதுச்சேவை செய்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம் சூரியன் ராசிக் கிரகம் அருகிலுள்ள அம்மன் சிறந்த பரிகார வழிபாடு.


கும்பம்

இவ் ராசியன்பர்கள் கூடிய நற்பலனை பெறுவர். இவ் ராசியானவர்கள் நல்லமன மகிழ்ச்சிகளுடன் காணப்படுவர். வியாபாரிகள் சிறந்த இலாபம் பெறுவர். முதலீடுகள் கைகூடும் மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேற்றை பெற்று பெரியோர் மதிப்பை பெறுவர். சமூக சேவையாளர், பலராலும் பாராட்டை பெற்றாலும் எச்சரிக்கையுணர்வுடன் செயற்படல் அவசியம். செவ்வாய் கிரகம் சிறந்த பலனைத் தரும். புன்னாலை கிருஷ்ண வழிபாடு சிறந்த பரிகார வழிபாடு.


மீனம்

இவ் ராசியன்பர்கள் புதிய வெற்றிகளை நன்மைகளைப் பெற்றாலும் அவ்வப்போது மனக்கசப்புகள் வந்து சேரும். நல்ல சுப காரியங்களில் ஈடுபட்டு மனமகிழ்ச்சியடைவர். வியாபாரிகள் கூடிய இலாபம் பெறுவர். மாணவர்கள் மனச் சோர்வின் காரணமாக கல்வியில் கவனக் குறைவு ஏற்படும். சமூக சேவையாளர்கள் சிறந்த பாராட்டைப் பெறுவர். நன்மை தரும் கிரகம் செவ்வாயாகும். அருகிலுள்ள முருகன் வழிபாடு சிறந்த பரிகாரம்.


விருச்சிகம்

இவ் ராசியன்பர்கள் ஜாக்கிரதையாக செயற்படல் அவசியம். வீண் பழி வந்து போகும். நீண்டகால தாமதத்திற்கு உட்படுவர். பொருள் விரயமாகும் வியாபாரிகள் சிறந்து விளங்குவர். புதிய முதலீடு கைகூடும். மாணவர்கள் பல்துறை விற்பன்னர்களாக செயற்படுவர். சமூக சேவையாளர்கள் முன் எப்போதும் இல்லாத உற்சாகத்துடன் நற்காரியங்கள் செய்வர். வியாழன் நன்மை தரும் சிறந்த கிரகம் அருகிலுள்ள ஈழத்து சிவன் சிவலிங்க வழிபாடு சிறந்தது.

*இம்முறை எண் சாஸ்திர பலாபலன்கள் இடம்பெறாமைக்கு வருந்துகிறோம். அடுத்த வெளியீட்டில் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கான எண் சாஸ்திர மற்றும் இராசி பலன்கள் வெளிவரும்*

# எங்கள் வாழ்க்கையில் யார் முதலாளி ?


இன்று உலகில் ஏற்பட்ட மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி அதன் காரணமாக ஏற்பட்ட வேலை இழப்பு, சேமிப்பு இழப்பு, வீடுகள் இழப்பு இப்படியான பல இவை அனைத்துக்கும் மூல காரணம் பணம். பணக் கவலையே மனக் கவலைக்கு மூல காரணம். தலைவலி, பசியின்மை, காரணமற்ற கோபம், பயம், எதிர்மறையான சிந்தனை போன்றவை ஏற்பட பணம் காரணம் என பிரிட்டன் மனநல ஆய்வாளர் டாக்டர் ராஜர் ஹெண்டர்சன் என்பவர் கூறியுள்ளார். மேலும் ஆபிரிக்காவில் தினசரி கண்மூடித்தனமாக செலவழிக்கும் பழக்கமும் இலாபம் ஈட்டுகிற வெறியும் அதீத பொருளாசையும் தொற்று நோய் போல் பரவி வருவதால், கடன், வீண் செலவு, வேலைப்பித்து, அதிருப்தி, பொறாமை, மன அழுத்தம் போன்றவை உண்டாக வழி வகுக்கிறது என செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது. பணத்தை கையாளும் விஷயத்தில் மாற்றங்கள் செய்தால் அதாவது நிர்வாகம் செய்யும் நடைமுறையை மாற்றினால் நிம்மதியான வாழ்வும் ஆரோக்கியமும் உண்டாகும். வரவுக்கேற்றாற்போல் செலவு செய்தல், நல்ல திட்டமிடல் அவசியம் வீடு கட்டுதல், காப்புறதி திட்டம் போன்ற சிறந்த திட்டமிடல் மிக மிக அவசியம். திட்டமிட்ட கடுமையான உழைப்பாளியிடம் நிச்சயம் பணம் சென்று சேரும். கற்றுக்கொள்ளுங்கள், கற்பதற்கு வயது வரம்பு கிடையாது அதன் அர்த்தத்தை புரிந்து கொண்டு செயற்படல் பணத்தைக் காட்டிலும் மனிதர்களை மதிக்க தெரிந்துகொள்ளுங்கள் எமக்கு தேவையானது உணவு, உடை, உறையுள். இவை தவிர எமக்கு மிகுதி ஆடம்பரமே. எமக்குள்ள தேவைகள் விருப்பங்கள் பற்றி தெரிந்துகொள்ளுங்கள் சிறந்த முறையில் பட்ஜெட் போடுவதன் மூலம் எங்கள் திட்டங்கள் நிறைவேற்ற முடியும். உங்கள் கையில் சம்பளம் வந்தவுடன் நீங்கள் சேமிக்க விரும்புகிற தொகையை உடனே வங்கியில் அல்லது வேறெங்காவது முதலீடு செய்யுங்கள் நன்கொடை கொடுத்து உதவி செய்யவும் சிறிதளவு பணத்தை சேமித்து வைக்க தெரிந்து கொள்ளுங்கள். இவற்றை சரியாக கடைப்பிடித்தால் எந்நாளும் நம் வாழ்வில் இன்பமே.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

– திருக்குறள் –

பொருள் இல்லாதவர்கட்கு இவ்வுலகில் இடம் இல்லாததைப் போல அருள் இல்லாதவர்கட்கு மறு உலகிலும் இடம் இல்லை என்பதை தெரிந்து கொண்டு வாழ வேண்டும்.





பாலாவோடை அம்மன் ஆலய உற்சவ காலக் காட்சிகள்






பாலாவோடை அம்மன் ஆலய உற்சவ காலத்தில் பாலாவோடை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுக் காட்சிகள்

# காரை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் அபிவிருத்தியடைய வேண்டும்!

காரைநகரில் இயங்கும் காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் யாவும் மந்த நிலையடைந்துள்ளது இந் நிலைமையைப் போக்கி மீண்டும் புத்துணர்வுடன் செயற்பட காரைநகர் அபிவிருத்திச் சபையின் நிர்வாக உறுப்பினர்கள் உழைக்க வேண்டும் என காரைவாழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் காரைநகர் அபிவிருத்திச் சபையினூடாக பல்வேறு அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் நடைபெற்றன. அத்துடன் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்கள் அனைத்தும் மந்த நிலையிலேயே உள்ளது.

**யார் மீது குற்றம் ?**

இந்நிலைமைக்கு யார் தான் காரணம்? இது எம்மவர் கேட்கும் கேள்வி! யாராகத்தான் இருக்கட்டுமே இவர்களிற்கு என்ன அவ்வளவு அக்கறை? இது சம்பந்தப்பட்டோரின் மனதில் எழும் ஆதங்கம். எது எப்படி இருப்பினும் சம்பந்தப்பட்டோர் விளப்படைய வேண்டும் என்பதுதான் உண்மையாகும். ஏனெனில் "காலம் பொன்னானது" எமது ஊர் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற தியாக சிந்தை கொண்ட புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் இன்றைய சமுதாயம் இருக்கும் போதே சில தேவைகளை நாமே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவைகளை எதிர்வரும் சமுதாயம் எவ்வளவிற்கு செய்யும் என்பது எதிர்பாக்க முடியாது. ஆகவே இவ் அபிவிருத்தி பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

**காரைநகர் அபிவிருத்திச் சபை தூக்கம் ஏனோ?**

காரைநகர் அபிவிருத்திச் சபை மாதாந்தம் கூட்டம் கூடுகின்றது. அதில் காரைநகர் முன்பள்ளிகளின் செயற்ாடுகள் சிறப்பாக ஆராயப்படுகின்றது. முன்பள்ளி ஆசிரியர்களிற்கு ஆங்கில கல்வி சிறப்பாக போதிக்கப்படுகிறது. இதனூடாக மாணவர்களிற்கும் ஆங்கிலம் போதிக்க வழியேற்பட்டுள்ளது. வழமைபோல முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்பட்டு வருவதுடன் தண்ணீர் பௌசரின் குடிநீர் விநியோகம் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்விடத்தில் காரைநகர் அபிவிருத்திச் சபையின் பணிகள் போற்றுதற்குரியது.

அதேபோல மாதாந்த செயலாளர் ஜெ. தில்லையம்பலவானர் ஐயா காலத்திலேயே வலந்தலைச் சந்தியில் பஸ் நிலையம் அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். அத்துடன் காரைநகர் புதுறோட் சந்தியில் நவீன நூல் நிலையம் அமைக்க காணி கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் ஒன்றரை வருடங்கள் ஆகியும் என்ன நடக்கின்றது என்பது எவருக்கும் புரியவில்லை. தொடங்கினால் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் செய்தால் மட்டுமே எந்த வேலைகளும் நிறைவடையும். அல்லது இவ்வாறு அரைகுறையாகவே இருக்கும். இதன் உண்மையான நிலைமைகளை புலம்பெயர் ஊடகங்களினூடாக தெரிவிக்கும் பொறுப்பு குறித்த சபையையே சாரும். இதன் மூலமே சில செயற்பாடுகளை நிரூபிக்க முடியும்.

**வெளிநாட்டு அபிவிருத்திச் சபைகளும் அக்கறையில்லை !**

காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயற்பாடுகள் தாமதமாவதற்கு வெளியூர்களில் இயங்கும் காரை அபிவிருத்திச் சபைகளும் முன்புபோல அக்கறையில்லாததும் காரணம் போல் தெரிகின்றது. ஏனெனில் இச் சபைகள் காரைநகர் அபிவிருத்திச் சபையுடன் தொடர்புகொண்டு தங்கள் செயற்பாடுகள் பற்றி தொடர்புகொள்வதில்லை என காரைநகர் அபிவிருத்திச் சபையினர் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தவர்கள் அதனை பூரணப்படுத்தும் வரை அக்கறையுடன் செயற்படல் வேண்டும்.

ஆகவே காரைநகர் அபிவிருத்திச் சபையும் புலம்பெயர் நாட்டு அபிவிருத்திச் சபைகளும் தொடர்பு கொண்டு பரஸ்பரம் கலந்துரையாடி காரைநகர் அபிவிருத்திகளைத் துரிதப்படுத்தல் வேண்டும். முன்பு போல் லண்டன் காரை நலன்புரிச் சங்கத்தின் குடிநீர் விநியோகம், (மதகுகளிற்கு கதவிடல்) சுவிஸ் அபிவிருத்திச் சபையின் வைத்தியசாலை கட்டட அபிவிருத்தி, மற்றும் ஏனைய உதவிகள் அனைத்தும் காலத்தால் செய்த உதவியாக மக்கள் மனதில் இடம் பிடித்தமையை மறக்க முடியாது. ஆகவே இன்றே மீண்டும். தொடருங்கள் உங்கள் பணியை! வாழ்க வழமுடன் !

# களபூமி பாலாவோடையில் இந்து இளைஞர் மன்றம் அமைப்பு !

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குழி ஸ்ரீ முத்துமாரி அம்மன் இந்து இளைஞர் மன்றம் என்ற பெயரில் புதிய இந்து இளைஞர் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

களபூமி பகுதியைச் சார்ந்த திருமணமாகாத இளைஞர்கள் ஒன்று சேர்ந்து இம்மன்றத்தினை அமைத்துள்ளனர். இதன் தலைவராக ப. குணரத்தினம், உபதலைவராக கோ. ரகுகாந்தன், செயலாளராக ந.ஜீவரத்தினம் உப செயலாளராக செ. மயூரன் பொரளாளராக ந. தணிகைவாசன். கணக்கு பரிசோதகராக ச. சுகந்தன் ஆலோசகராக ச.ஆ. இராசலிங்கம் அவர்களும் நிர்வாக உறுப்பினர்களாக சி.ஜெயக்குமார், க.யோகேஸ்வரன், ச.சசிரூபன், பா. கிருபாகரன், ந. இராமகிருஷ்ணன், நி. ரங்கநாதன், சி. சிவரூபன், த. புஸ்பகுமார், ச. விஜயரூபன், க அச்சுதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம் மன்றத்தின் செயற்பாடு தொடர்பாக நிர்வாகத்தின் தலைவருடன் வினாவியபோது ஒவ்வொரு பௌர்ணமி நாள் அன்றும் கிராம அறநெறி பாடசாலை மாணவர்களிற்கு சமயப் போட்டிகள் நடாத்தி அவர்களிற்கு பரிசுகள் வழங்கி மாணவர்களை ஊக்குவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். மேலும் இந்து சமய மேம்பாட்டிற்கு உழைப்பதுடன், கிராம கலை கலாசார பண்பாடுகளை வளர்த்தெடுத்தல். ஆலய அறங்காவலர்களுடன் இணைந்து ஆலய சேவை மனப்பாங்கிற்கு உதவுதல் போன்ற செயற்பாடுகளையும் முன்னெடுக்கவுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

# களபூமியில் கோப்சிற்றி

காரைநகர் களபூமி தெருவடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் "சிறப்புக் கூட்டுறவு நகர்" விற்பனை நிலையம் 26.05.09 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் சு. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், சமூக சேவைகள் சமூக நலத்துரை அமைச்சின் யாழ் மாவட்ட மக்கள் தொடர்பதிகாரி சில்வஸ்திரி அயன்ரின்யூட் கியொர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இச் சிறப்புக் கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்தில் பொதி செய்யப்பட்ட பொருட்கள் "Super Market" முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.







## களபூமி பொன்னாவளை – வளுப்போடை வீதி புனரமைப்பு நிதி ஒதுக்கித் தருமாறு கோரிக்கை !

காரைநகரின் பிரதானமானதும் அதிகளவு மக்கள் பாவனைக் குட்படுவதும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுமான மூன்று வீதிகள் புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கித் தருமாறு காரைநகர் பிரதேச சபையினர் உள்ளூராட்சி அமைச்சிடம் விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- களபூமி பொன்னாவளை – வளுப்போடை வீதி
- சிவகாமி அம்பாள் ஆலய வீதி
- ஆலடி – கேசடை வீதி

ஆகிய மூன்று வீதிகளும் புனரமைக்க நிதி ஒதுக்கித் தருமாறு கோரியுள்ள அதேநேரம் இவ் வேலைத்திட்டங்கள் நிறைவு பெற சுமார் பதினைந்து மில்லியன் ரூபா வரை செலவு ஏற்படலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

## ஆதித்தியனின் தேடலில்



### ஆதிகால சித்த மருத்துவ உண்மைகள்

#### மஞ்சள் மகத்துவம்

*– அமெரிக்க பல்கலைக் கழகம் –*

அமெரிக்காவின் வட கரோலினாவில் உள்ள டியூக் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மஞ்சளில் சிறந்த மருத்துவ குணங்கள் இருப்பதாக சுண்டெலிகள் மூலம் செய்யப்பட்ட ஆய்விலிருந்து கண்டறிந்திருக்கிறார்கள். அதாவது மூளைக்குள் இருக்கும் நரம்பு மண்டலத்தில் உருவாகும் ஒருவகை புரோட்டீன் அமிலத்தன்மையின் பரவல் காரணமாக நினைவாற்றல் இழப்பதாக மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள் இந்த புரோட்டீன் அமிலத்தன்மையின் பரவலை தடுக்கவல்லது மஞ்சளில் இருக்கும் குர்மின் என்கின்ற உட்பொருள். என ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் முரளி துரைச்சாமி அவர்கள் கூறுகிறார்.

மேலும் மூன்று முறை மஞ்சள் கலந்த உணவை சாப்பிடுவதால் மூளை அழுகல் மற்றும் நினைவாற்றல் குறையும் நோய் தாக்குவதற்கான வாய்ப்புக்கள் குறைவதாக அவர் கூறியுள்ளார். மஞ்சளின் மகத்துவம் என்கிற இச்செய்தி மஞ்சளை தினமும் உணவில் சேர்த்துக்கொள்ளும் ஆசிய மக்களுக்கு உற்சாகம் ஊட்டுவதாக இருக்கிறது என ஆய்வை மேற்கொண்டவர்களால் கூறப்பட்டுள்ளது.



#### இஞ்சி



- இஞ்சி சாறில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும்.
- காலையில் இஞ்சி சாறில் உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட, பித்தம், தலைசுற்று, மலச்சிக்கல் தீரும். உடம்பு இளமை பெறும்.
- இஞ்சி சாறில் தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டு சாப்பிட்டு வர நோய் தடுப்பு திறன் கூடும். உற்சாகம் ஏற்படும். இளமை பெருகும்.

#### வெங்காயம்



- வெங்காயம் சாப்பிட தொண்டை கரகரப்பு நீங்கி குரல் வளமாகும்.
- வெங்காயத்தை அரைத்து முன் நெற்றி பக்கவாட்டு நெற்றியில் பற்றுப் (பத்து) போட தலைவலி குறையும்.
- வெங்காயத்தை ஒரு மண்டலம் தொடர்ந்து சாப்பிட்டு வர உடல் குளிர்ச்சியும், மூளை பலமும் உண்டாகும்.

இந்தியாவிலிருந்து
சிவராமன்



அளவுக்கு மிஞ்சினால்
அமிர்தமும் விஷமாகும்"
–சித்தர் பழமொழி–




# மாணவர் பக்கம்

## சுடொக்கு

**சென்ற வார கணக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 4 | 3 | 8 | 6 | 1 | 7 | 5 |
| 6 | 3 | 1 | 7 | 5 | 4 | 8 | 9 | 2 |
| 5 | 7 | 8 | 9 | 2 | 1 | 6 | 4 | 3 |
| 4 | 6 | 3 | 5 | 9 | 8 | 7 | 2 | 1 |
| 8 | 9 | 5 | 2 | 1 | 7 | 3 | 6 | 4 |
| 2 | 1 | 7 | 4 | 6 | 3 | 9 | 5 | 8 |
| 7 | 8 | 2 | 1 | 4 | 9 | 5 | 3 | 6 |
| 3 | 4 | 6 | 8 | 7 | 5 | 2 | 1 | 9 |
| 1 | 5 | 9 | 6 | 3 | 2 | 4 | 8 | 7 |

**பரிசு பெறுவோர் விபரம் அடுத்த இதழில்**

**இம்முறைக்கான போட்டி வினா**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | | | | 1 | 8 | 5 | |
| 5 | | 4 | 9 | | | | 3 | 1 |
| 1 | | 6 | 8 | 5 | | | 4 | 7 |
| | 3 | | 7 | | | | 8 | |
| | | 8 | 3 | 6 | | | 7 | 4 |
| | | 7 | 4 | | | | | 3 |
| 3 | | | 5 | | | 7 | | 8 |
| 6 | | 5 | 1 | | | | | 9 |
| | | | 6 | | | | | |

மேலே காணப்படும் 81 சதுரப் பெட்டிகளில் எண்கள் நிரப்பப்படாது இருக்கும் இடங்களை 1 தொடக்கம் 9 வரையிலான இலக்கங்களால் நிரப்பும் பொழுது மொத்தத்தில் இடமிருந்து வலமாகவோ மேலிருந்து கீழாகவோ இலக்கம் ஒரு தடவை மட்டுமே வந்திருத்தல் வேண்டும். 6 பிரிவில் காணப்படும் சதுரங்களில் ஒரு தடவை மட்டுமே ஒரு இலக்கம் வந்திருத்தல் வேண்டும்.

இம்முறை இப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறும் முதல் ஐந்து அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (குறிப்பு: இலங்கை காரைநகரைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் பரிசுப் பெறுமதி 1000/- இலங்கைப் பணம்)

## கல்வி



செல்வன் சு. செந்தூரன்
தரம் 05
வவுனியா தமிழ் மத்திய
மகா வித்தியாலயம்

கல்வி என்பது மூன்றெழுத்து - அதனைக்
கற்றுவிட்டால் மாறும் தலை எழுத்து
கற்றவர் நெஞ்சம் பூவாகும்
கல்லாதவர் நெஞ்சம் புண்ணாகும்.
காற்றாலும் தீயாலும் அழியாது
கடற்கோளாலும் களவாட முடியாது
கற்பவர் நெஞ்சை மகிழச் செய்யும்
கல்வியே எம் வாழ்விற்கு உயர்வைச் சொல்லும்

## எங்கள் பிரதேசத்தின் இயற்கை எழில்

செல்வன். கே. சஜீவன் - தரம் 08 - யாழ்ற்ரன் கல்லூரி



கற்பகதரு நிறைந்த காரைநகர்
கடல் சூழ் நல் தீவாம்
மத்தியிலே நன்செய் கழனிகள்
சத்தியமாய் தனித்துவமான எம் கிராமம்

நாற்புறமும் மீன்கொழிக்கும் கடல் வளம்
நடுவினிலே மக்கள் தம் குடியிருப்புக்கள்
இற்றைக்கு பல நூற்றாண்டு கடந்த ஆலமரங்கள்
இங்குண்டு இயற்கை கொஞ்சும் எழில் வளங்கள்

உல்லாசத்திற்கு ஓர் கசூர்னா கடற்கரை
உயரமாய் நிற்கும் கலங்கரை விளக்கு
உறவாடும் தென்னை மரங்கள்
உறைவிடமான இயற்கையான எம் காரைநகர்.

## மாணவர்களே! நீங்களும்........



மாணவர் பக்கத்திற்கு உங்களின் கவிதை, கட்டுரை கதை, சிறுகதை, விடுகதை, பழமொழிகள், பொன்மொழிகள், பொது அறிவு விவேகம், ஓவியம் போன்றவை "காரை ஆதித்தியனில்" இடம்பெற நீங்கள் செய்ய வேண்டியது: பின்வரும் படிவத்தை பூர்த்தி செய்து ஆக்கத்துடன் உங்கள் படத்தையும் இணைத்து கீழே உள்ள விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

பாடசாலை :..............................................
..............................................
மாணவர் பெயர் :..............................................
தரம் :..............................................
ஆசிரியர் பெயர் :..............................................
திகதி :.......................... கையொப்பம் :..........................

மாணவர் பக்கம்
"காரை ஆதித்தியன்"
த.தயாபரன்,
இல. 5, 6/2
உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை.
கொழும்பு06.

## சிரிப்பு சிரிப்பு



ஆசிரியர் : நான் வரும் போது ஏன் சிரிக்கிறீர்கள்?
மாணவர்கள் : துன்பம் வரும் போது சிரிக்கணும்னு நீங்கதானே சொன்னீங்க.

விஞ்ஞான ஆசிரியர் : ஒரு மெழுகுவர்த்தியை கொளுத்தி விட்டு இதிலிருந்து ஒளி எப்படி வந்தது என்று மாணவர்களிடம் கேட்டார். ஒரு மாணவன் வந்து மெழுகுவர்த்தியை ஊதி அனைத்துவிட்டு இப்போது ஒளி எங்கு சென்றதோ? அங்கிருந்து தான் ஒளி வந்தது என்றான்.

ஆசிரியர் : தண்ணீரில் வாழும் மூன்று உயிரினங்கள் சொல்லுங்கோ
மாணவன் : மீன், முதலை, எங்க அப்பா.
ஆசிரியர் : ????.........


# மாணவர்கள் தெரிந்து கொள்ளுங்கள்
# உலக நாடுகள் வரிசையில் ஜெர்மனி

| | ஜெர்மன் மாநிலங்கள் | தலைநகரம் |
|---|---|---|
| 1. | பாடன் - வுவற்றம் பேர்க்<br>Baden - Wurttemberg | ஸ்ருட்கார்ட்<br>Stuttgart |
| 2. | பயர்ன்<br>Bayern | முன்சென்<br>Munchen |
| 3. | பெர்லின்<br>Berlin | பெர்லின்<br>Berlin |
| 4. | பிராண்டென்பேர்க்<br>Brandenburg | பொட்ஸ்டம்<br>Postsdam |
| 5. | பிறேமன்<br>Bremen | பிறேமன்<br>Bremen |
| 6. | கம்பேர்க்<br>Humburg | கம்பேர்க்<br>Humburg |
| 7. | கெஸ்சன்<br>Hessen | வீஸ்பாடன்<br>wjesbaden |
| 8. | மெக்லென்பேர்க்-வேர்பொமென்<br>Mecklenburg-Verpommern | சுவேரின்<br>Schwerin |
| 9. | நீடர்சக்ஸன்<br>NederSachsen | ஹனோவர்<br>Hannover |
| 10. | நோட்றைன்<br>Nordrhein-westfalen | டஸல்டோர்ஃப்<br>Dusseldorf |
| 11. | றைன்லண்ட்-பல்ஸ்<br>Rheinland - Pfalz | மைன்ஸ்<br>Mainz |
| 12. | சார்லாந்த்<br>Sharland | சார்புருக்கன்<br>Saarbrucken |
| 13. | சக்ஸ்சன்<br>Sachsen | டிரேஸ்டன்<br>Dresden |
| 14. | சக்ஸ்சன்-கன்கல்ட்<br>Sachsen-Anhalt | மார்க்டபேர்க்<br>Magdeburg |
| 15. | ஷலேஸ்விக்-கோல்ஷடைன்<br>Schleswig-Hotstein | கீல்<br>Kiel |
| 16. | ரூறிங்கென்<br>Thuringen | ஏர்ஃபேர்ட்<br>Erfurt |

ஜெர்மனி என்பது நடு ஐரோப்பாவில் உள்ள கூட்டாட்சி குடியரசு, இதன் வடக்கே வடகடல் டென்மார்க், பால்கட்டிக் கடல் கிழக்கே போலந்து செக் குடியரசு, தெற்கே ஆஸ்திரியா, சுவிற்சர்லாந்து, மேற்கே பிரான்ஸ், லக்சம் பேர்க், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகியன எல்லைகளாக உள்ளன. ஜெர்மனியின் பரப்பளவு 357,021 கி.மீ$^2$ ஜீ8, ஜி4, றெட்டோ, ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றில் ஒரு உறுப்பு நாடாகும். 82 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட இந்த நாடு ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றில் ஒரு உறுப்பு நாடாகும். 82 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட இந்த நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிகூடிய மக்கள் தொகை கொண்ட உறுப்பு நாடாகவும் மூன்றாவது அதி கூடிய புலம் பெயர்ந்த




மக்களைக் கொண்டதாகவும் திகழ்கிறது. ஜெர்மனி 16 மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சி நாடாளுமன்ற குடியரசு ஆகும். இதன் தலைநகரம் பெர்லின் இதுவே இந்நாட்டின் பெரிய நகரமும் ஆகும். நாணயம் யூரோ (EUR) இணைய குறி. de தொலைபேசி +49, புகழ் பெற்ற ஜெர்மனியர்கள் ஐன்ஸ்டீன், பிளாங்க், கெப்னர், மீசல், போஸ்ச், பாரன்ஹீட், சீமன்ஸ், பென்ஸ், கார்ள்மாக்ஸ், பிரடெரிக் ஏங்கெல்ஸ்


அதிபர் ந.பரமசிவம்

# தீவக வலயத்தில் தமிழ் தினப் போட்டிகளில் அதிக இடங்களைப் பெற்றது யாழ்ற்ரன் கல்லூரி

## பரிசளிப்பு விழா அறிக்கையில் அதிபர் தெரிவிப்பு!

கோட்டமட்ட, வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் சிறப்பாகவும் ஆர்வத்துடனும் பங்குபற்றி தீவக வலயத்திலேயே அதிக இடங்களைப் பெற்ற முதல்தர பாடசாலையாக எமது கல்லூரி திகழ்கின்றது என குறிப்பிட்டுள்ளார். கல்லூரி அதிபர் நபரமசிவம்.

அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா அதிபர் அறிக்கை வெளியீட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதிபர் அறிக்கையின் சுருக்கம் வருமாறு:

1947 ஆம் ஆண்டு பெப்ரவரி 02 ஆம் திகதி எமது முன்னோர்களின் தளரா முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி 1974 ஆம் ஆண்டில் 1 C தரப் பாடசாலையாகவும், 1979 ஆம் ஆண்டில் AB தரப் பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டது.

துர் அதிஷ்ட வசமாக 1991 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25 ஆம் திகதி இடம்பெயரலாயிற்று.

இடம்பெயர்ந்த நிலையில் 1993 ஆம் ஆண்டு தை மாதம் 6ஆம் திகதி கல்லூரியின் தனித்துவம் பேணும் நோக்கில் வட்டுக்கோட்டையில் இயங்கலாயிற்று.

இக்கல்லூரி வைரவிழா கண்டநிலையில் யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய கல்லூரிகளுடன் ஒப்பிடத்தக்கவகையில் வளர்ச்சியடைந்து வருகின்றமைக்கு தன்னலம் கருதாது சேவை மனப்பாங்குடனும், கடமையுணர்வுடனும் கடமையாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களது பணியே காரணமாக அமைந்தன.

இக்கல்லூரியில் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான சகல பிரிவுகளும் நடைபெற்று வருகின்றன.

1991 இல் 1289 மாணவர்களுடன் இயங்கிய இக்கல்லூரி இன்று 610 மாணவர்களைக்கொண்டு செயற்படுவது மனவருத்தத்திற்குரியது என்பதாகும். இதற்கு மக்கள் மீளக் குடியேறாமையே காரணமாகும்.

1996 ஆம் ஆண்டு ஆடிமாதம் கல்லூரி மீண்டும் தனது சொந்த தளத்தில் இயங்கலாயிற்று. இற்றைக்கு 13 ஆண்டுகளாக தொடர்ச்சியான கல்விப்பணியை இச்சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஆற்றி வருகின்றது.

கற்றலோடு, இணைப்பாடவிதான செயற்பாடும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் கோட்ட, வலய மட்டங்களில் வெற்றிக்கனிகளைத் தட்டி கம்பீர நடையுடன் மிளிர்வது யாவரும் அறிந்ததே!

### யாழ்ற்ரன் ஆசிரியர் குடும்பம்

எமது கல்லூரியில் 39 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். அவர்களுடன் இணைப்புப் பெற்ற 6 ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்றனர். ஓர் குடும்பம் போன்று தமக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி வருவதுடன் நேரகாலம் பாராது கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்து வருகின்றனர். யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அதிக தூரம் கடந்து அதிகநேரம் செலவு செய்து வருகின்றபோதிலும் உரிய நேரத்திற்கு வருகை தந்து ஓர் குடும்பமாக பங்கேற்று சிறப்பாக உழைத்து வருகின்றனர்.

### இணைப் பாடவிதானப் போட்டிகள்

எமது கல்லூரி இணைப்பாடவிதான துறையில் சிறந்த சாதனைகளைப் படைத்து வருகின்றது.

### விளையாட்டு

எமது கல்லூரி வலைப்பந்தாட்ட அணி கோட்ட மட்டத்தில் 17, 19 வயது அணிகள் முதலிடத்தையும், 15 வயது அணி இரண்டாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. வலய மட்டத்தில் வலைப்பந்தாட்டம் 15, 19 வயது அணிகள் 1 ஆம் இடத்தையும், 17 வயது அணி 2 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. மென்பந்து துடுப்பாட்டத்தில் கல்லூரி அணி 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அதேபோன்று மெய்வல்லுநர் போட்டியில் அதிக இடங்களைப் பெற்றுக்கொண்டதுடன் மாவட்ட மட்ட போட்டியிலும் பங்குபற்றி ஒரு சில நிகழ்ச்சிகளில் 3ஆம் இடத்தைப் பெற முடிந்தது. கரப்பந்தாட்டப் போட்டிளில் கோட்டமட்டத்தில் 17, 19 வயது அணி முதலாம் இடத்தையும், 15 வயது அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன், வலய மட்டத்தில் 17 வது அணி முதலாம் இடத்தையும், 19 வயது அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்ற ஆன்றோரின் வாக்குக்கு ஏற்ப எண்ணையும் எழுத்தையும் மாணவர்களில் பெரும்பாலானோர் சரியாக கற்றுக்கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். இதில் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆரம்பக் கல்வியில் ஏற்படும் இக்குறைபாடும் மொழித்திறன் விருத்தியின்மையும் அதன் எதிர்காலத்தையே பாதிக்கின்றது. இன்று தாய்மொழிக் கல்வியில் இத்தகைய பின்தங்கிய நிலை கல்வி உலகுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.

மாணவர்கள் வாசிப்புத்திறனை விருத்தி செய்வதில் நாட்டம் செலுத்தாமை அவர்களின் சிந்தனைத்திறன் விரிவடையாமைக்கு ஓர் காரணியாக அமைகின்றது. பரீட்சையை மையமாகக் கொண்டு கல்வி கற்பதனால் சமூகத்துடன் இணைந்து வாழும் தன்மையைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

இதனால் சிந்தனை இடைவெளி அதிகரித்துச் செல்கின்றது. அதே போன்று பொறுப்புணர்வுத் தன்மைகளும் சமூக நோக்கும் பின்தள்ளப்படுகின்றது.

ஆங்கிலக் கல்வியில் மாணவர்கள் நாட்டம் கொள்ளாமையும் அக் கல்வியில் காணப்படும் தேக்க நிலையும் மாணவர்கள் மாறிவரும் உலகுக்கு ஏற்ப தங்களை தயார்படுத்த முடியாதவர்களாக உள்ளனர். எனவே மாறிவரும் உலகிற்கு ஏற்ப மாணவர்களாகிய நீங்கள் உங்களைத் தயார்படுத்துவதற்கு ஆங்கிலக் கல்வியில் நாட்டம் கொள்ளவேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் வேண்டிக்கொள்கின்றேன்.

இன்று நாட்டில் காணப்படும் இளைஞர் அமைதியின்மைக்கு மாணவர்கள் கால ஓட்டத்திற்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ள முற்படாமையும், சிறந்த வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ள முன்வராமையும் காரணங்களாக அமையலாம். எனவே பாடசாலையை விட்டு வெளியேறியதும் எதிர்காலம் பற்றி பீதி கொள்வதற்கு காரணமாக அமைகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

| ஆண்டு | தரம் 05 புலமைப்பரிசில் சித்தி வீதம் | க.பொ.த சாதாரணதரம் சித்தி வீதம் | க.பொ.த உயர்தரம் சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2005 | 7% | 76.6% | 68.18% |
| 2006 | 20.1% | 80.0% | 58.8% |
| 2007 | 38.5% | 65.0% | 62% |
| 2008 | 20.5% | 72% | 65% |

### கல்விசாரா அலுவலர்கள்

கல்விசாரா உத்தியோகத்தர்கள் தங்கள் பணியை சிரமேற்கொண்டு கடமையுணர்வுடன் வரம்பு தவறாது காலநேரம் பாராது பணிவன்புடன் கடமையாற்றி வருவது யாவரும் அறிந்ததே ! அவர்களுக்கும் இவ் இனிய நேரத்தில் பாராட்டி மகிழ்ச்சி தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

### மாணவர் மன்றங்கள்:

மாணவர்களின் நடத்தைசார் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற சமூகப் பொருத்தப்பாடு உடையனவாக காண்கின்ற பணியை மாணவர் மன்றங்கள் ஏற்படுத்தி வருகின்றனர்.

- ★ க.பொ.த (உ/த) மாணவர் மன்றம்
- ★ மாணவ முதல்வர் மன்றம்
- ★ இந்து மாணவர் மன்றம்
- ★ சாரணர் மன்றம்
- ★ முத்தமிழ் மன்றம்
- ★ விஞ்ஞான மன்றம்
- ★ ஆங்கில மன்றம்
- ★ பாரதியார் மன்றம்
- ★ வள்ளுவர் மன்றம்
- ★ ஆரம்பப் பிரிவு மாணவர் மன்றம்

என்பன குறிப்பிடத்தக்கவை.

இம்மன்றங்கள் சமூக, சமய, கலாச்சார பண்பினைப் பேணும் வகையிலும், மொழியாற்றல் விருத்தி, மனப்பாங்கு விருத்தி சமூகத்துடன் இணைந்து வாழும் மனப்பாங்கினை உருவாக்குவதில் வெற்றிகண்டு வருகின்றது.

### தமிழ்த் தினப் போட்டி

கோட்டமட்ட, வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் சிறப்பாகவும், ஆர்வத்துடனும் பங்குபற்றி தீவகத்திலே அதிக இடங்களைப் பெற்ற முதல்தர பாடசாலையாக இயங்கி வருகின்றது. மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் அதிக நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய போதிலும் ஒரு சில நிகழ்ச்சிகளில் மட்டும் 3ஆம் நிலையைப் பெற முடிந்தது குறிப்பிடத்தக்கது.

### ஆங்கில தினப்போட்டி

ஆங்கிலதினப் போட்டியில் வலய மட்டத்தில் 29 இடங்களைப் பெற்றுத் தீவக வலயத்திலேயே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




காரை யாழ்ற்ரன் கல்லூரி பரிசளிப்பு விழாவின்போது விருந்தினர்களாக கலாநிதி குணராஜா மற்றும் பிரதேச சபை செயலாளர் இரா. லோகநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதனையும் திருமதி. குணராஜா அவர்கள் சித்திபெற்ற மாணவன் கெ. சஜீவனிற்கு பரிசு வழங்குவதனையும் அருகில் கல்லூரி அதிபர் ந. பரமசிவம் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

## சிவகாமி அம்பாள் ஆலய பஞ்சரத பவனி காட்சிகள்



## நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா காட்சிகள்



## ஆங்கில பாட பயிற்ச்சியில் பரீட்சை காரை அபிவிருத்திச்சபை நடவடிக்கை !

காரைநகர் அபிவிருத்திச் சபையினூடாக கனடா கலாசார மன்றம் பல்வேறுபட்ட கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாக காரைநகர் பாடசாலைகளில் கல்விகற்கும் தரம் 10, 11 மாணவர்களிற்கு ஆங்கிலப் பாடத்தில் பயிற்சி பரீட்சை நடாத்தி வருகின்றனர்.

இப்பயிற்சிப் பரீட்சையில் சுமார் இருநூற்று அறுபத்தைந்து மாணவர்கள் கலந்துகொள்வதுடன் இப்பரீட்சை வாராந்தம் நடாத்தப்பட்டு மாதத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களிற்கு பாடசாலை ரீதியாக பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவுஸ்திரேலியா காரை கலாசார மன்ற அனுசரணையுடன் க.பொ.த உயர்தர மாணவர்களிற்கு வழங்கப்பட்ட உதவுதொகை நிறுத்தப்பட்டு அதற்கான மாற்று திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காரைநகரில் மாதர், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் அமைப்பு

காரைநகர் பிரதேச மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன இணைந்து காரைநகர் பிரதேச மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காரைநகர் செயலக நிர்வாக உத்தியோகத்தர் அ. சத்தியமூர்த்தி மாவட்ட கிராம உத்தியோகத்தர் திருமதி. ஏ. ஜெயராஜன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. ஜீவகலா மற்றும் பிரதேச மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன கலந்து கொண்டன. இதன் புதிய நிர்வாகத்தின் தலைவராக – க. கனகரட்ணமும், செயலாளராக கு. சோமசுந்தரம், பொருளாளராக திருமதி. தவமலர் பிரேமச்சந்திரன், உபதலைவராக செ. கந்தசாமி, உப செயலாளராக வே.வீரசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு நிர்வாக உறுப்பினராக மேலும் 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## உயர்தர மாணவர் மன்ற ஒன்று கூடல்

தியாகராஜா மத்திய மகா வித்தியாலய க.பொ.த உயர்தர மாணவர் மன்ற ஒன்று கூடல் அண்மையில் நடைபெற்றது.

உயர்தர மாணவ மன்றத் தலைவர் செல்வன் ந. அரிகரசுதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கை நெறித் தலைவர் பேராசிரியர் திருமதி. T. ரவீந்திரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக தீவக கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் A. ஸ்ரெனிஸ்லால், அவர்களும் கௌரவ விருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## காரைநகர் கசூர்னாக் கடற்கரையின் அபிவிருத்திப் பணிகள் உடன் ஆரம்பம்
## உல்லாச விடுதி அமைக்கவும் திட்டம்!

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்தும் நோக்கில் காரைநகர் கசூர்னாக் கடற்கரையும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இதன் ஆரம்ப கட்டமாக துப்பரவு பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் இதற்கான புதிய வீதி அமைக்கும் பணியும் ஆரமிக்கப்பட்டுள்ளன.

இவ் வீதியானது கொங்கிறீற் இனால் ஆன நவீன வீதியாக அமைக்கப்பட்டுள்ளது. கடற்கரையின் மலசலகூடம், குடிநீர் உட்பட அத்தியாவசிய பணிகள் காரைநகர் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் இங்கு நவீன முறையிலான உல்லாச பயன விடுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. மேற்கூறப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் ஆராய்வதற்கான வடமாகாண ஆளுநர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பலரும் கசூர்னாக் கடற்கரைக்கு வருகை தந்து ஆராயந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீளக்குடியமர்வு நடவடிக்கைக்கு வியாவில் ஐயனார் ஆலயம் உதவி !

காரைநகரில் மீளக்குடியமர்வு நடவடிக் கைக்கு கடற்படையினர், உதவி அரச அதிபர் பணிமனை, வியாவில் ஐயனார் ஆலயம் ஆகியன உதவி வருகின்றனர்.

தே.........காட்டு குடியிருப்பு பகுதியில் தங்க வைக்கப்பட்டு மீளக்குடியமரும் மக்களிற்கு கடற்படையினர் உணவு வசதிகள் அளித்து வருகின்றனர். ஏனைய வசதிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவினர் ஒருங்கமைத்து செயற்படுத்தி வருகின்றனர். பிரதேச சபை மூகம் குடிநீர் வசதி, வைத்தியசாலை, மூகம் நடமாடும் சேவை, ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உறவினரல்லாத குடும்பங்களிற்கு வியாவில் ஐயனார் ஆலயம் இருநேர உணவுகளை வழங்கியது. மற்றும் குடிமிருப்பு பகுதியில் தங்க வைக்கப்பட்டிருக்கும் நேரம் மெழுகுதிரி போன்ற உடனடி தேவைகளை உதவி அரச பணிமனை மூலம் வழங்கி வருகின்றது. தற்போது லண்டன் நலன்புரிச் சங்கம், உதவி அரச அதிபர் மூலம் ஏனைய உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

*(25. 09. 09 எழுதப்பட்டது)*

## மீளக்குடியமர்வினை பாராமுகமாக பார்க்கும் காரை அபிவிருத்தி சபை!

காரைநகரில் மீளக்குடியமர்வு நடைபெறும் போது காரை அபிவிருத்திச் சபை பாராமுகமாக உள்ளது. தாம் உதவி செய்ய தமக்கு எழுத்து மூலம் அழைப்பில்லை என்றும் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மீளக்குடியமர வேண்டும் என்று எல்லோரும் தவியாய் தவிக்கும் நேரம் அதற்கு உதவ முடியாது என கை விரித்தது மிகவும் வேதனைக்கு உரியது. மீளக்குடியமர்விற்கு அரசு உதவி செய்யுமாம். அதுபற்றி எவரும் அக்கறைப்படத் தேவையில்லை என தலமை கூறுகிறதாம்.

இதனால் வெளிநாட்டு அபிவிருத்திச் சபைகள் மீளக்குடியமர்வு மக்களிற்கு) நேரடியாக உதவ முன் வந்துள்ளன.

*(25. 09. 09 எழுதப்பட்டது)*

# தமிழ் கற்க வேண்டும்

இந்தியாவிலுள்ள தமிழகத்திற்கு வெளியே சுமார் 15 மில்லியன் தமிழ் மொழி பேசும் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று அண்மைய புள்ளிவிபரம் தகவல் வெளியிட்டுள்ளது. இதில் 20 சதவீதம் இந்திய துணைக் கண்டத்துக்கு அப்பால் வாழ்கிறார்கள் என்பதும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் புலம்பெயர்ந்து அல்லது தொழில் நிமித்தம் புறப்பட்ட தமிழ் குடும்பங்கள் தங்கள் தாய் மொழி தமிழை கற்பதில் பல சிரமங்களை அவ்வப்போது எதிர்நோக்கிறார்கள் என்பது வெளிப்படை. குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு புறப்பட்ட தமிழ் குடும்பங்களின் இன்றைய தலைமுறையினர் தமிழ் மொழி தெரியாது வேற்று மொழி தாய் மொழியாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் பலர் தாம் தமிழை கற்காது அல்லது தமது மூதாதையர் ஆர்வம் கொள்ளாது விட்டதையிட்டு மிகவும் கவலையடைந்துள்ளனர். ஆதலால் தற்போது இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழ் பேசும் மக்களும் தமிழை இழக்கக்கூடாது !!

எமது தாய் மொழி தமிழை கற்க வழி ....................

jha; nkhopapy; NgRtJ

நீங்கள் உங்களுடைய பிள்ளையுடன் உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த மொழியில் பேசுவதால், அப்பிள்ளை வேற்று மொழிகளை பழகுவதற்கு அதுவே ஒரு திடமான அத்திவாரம் ஆகிறது.

nrhy;tijf; Nfl;gJk; mjw;Fg; gjpyspg;gJk;

உங்களுடைய பிள்ளை உங்களுடன் நிறையக் கதைப்பதன் மூலம் அதனுடைய பேச்சாற்றல் அதிகரிக்கிறது. அத்துடன் அது அவதானித்த விடையங்கள் பற்றி பேசும் போது புதிய சொற்களைத் தெரிந்துகொள்கிறது. வேறும் புதிய சொற்களைத் தெரிந்துகொள்ள அப்பிள்ளைக்கு ஆர்வம் ஏற்படுகிறது.

சேர்ந்து இருந்து நகைச்சுவையாகக் கதைக்கையில், விளையாடும் போதும், கவிதை சொல்லும் போதும், பாடல் பாடும் போதும், உடல் அசைவுடன் விளையாடும் போதும் பிள்ளை கதைப்பதற்கு அனுமதிக்க வேண்டும். அக் கதைகள் தமாசாக இருப்பது நன்று.

கதைகள் கூறுவதும், படங்கள் பார்ப்பதும் கதைகளும், படங்களும் உங்களுடைய பிள்ளையை புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும், அதுவும் உங்களுடன் சேர்ந்து அவற்றைத் தெரிந்துகொள்ளும். அத்தோடு பல புதிய வார்த்தைகளையும் தெரிந்துகொள்ளும்.

Nru;e;J vOj;ijf; fz;Lgpbg;gJ

எழுத்துக்களும், படங்களும் உங்களுடைய பிள்ளையை நன்கு கவரும் உங்களது பிள்ளைக்கு உங்களது உதவி மறைமுகமாக மனதில் பதியும். அதுவே அவர்கள் தாள்களையும், எழுதுகோலையும் எடுத்துப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு தூண்டுகோளாக அமையும்.

E}y; epiyaj;Jf;F NghtJ

புத்தகங்கள் நல்ல நண்பர்கள் ஆகலாம். நீங்கள் உங்களுடைய பிள்ளையுடன் சேர்ந்து நூல் நிலையத்துக்கு சென்று அங்கு புத்தகங்களை இரவலாக வீட்டிற்கு எடுத்து வரலாம்.

njhlu;Gfis cz;lhf;Ftjw;F

உங்கள் பிள்ளையால் அயல் மொழி கதைக்க முடியாது போய்விடுமே என்று கவலைப்படாதீர்கள். உங்கள் பிள்ளை அயல் (வேற்று) மொழி பேசுகின்ற பிள்ளைகளுடனும் பெரியவர்களுடனும் தொடர்பினை வைத்திருந்தால் போதும். அப்பிள்ளையால் விரைவாக அம்மொழியைக் கதைத்திட முடியும். அவர்கள் தொடர்பு வைக்கக் கூடிய இலகுவான வழிவகைகள் உதாரணமாக சிறுவர்கள் விளையாட்டுக் குழு, பிள்ளைகள் பராமரிப்பு இடம்.

thrpg;gij Cf;Ftpg;gjpy; FLk;gKk; xU Kf;fpa gq;F tfpf;fpd;wJ.

ஏற்கனவே வாசித்த அடிப்படை அனுபவம் பாடசாலை கல்வியில் வாசிப்பதை இலகுவாக்கும். இம்மாதிரியான திட்டம் மொழி வளர்ச்சிக்கும் வழிகாட்டலுக்கும் சிறந்த ஆதரவு கொடுப்பன என்பதை மனதில் வைத்து செயல்படுங்கள்.

உலகம் முழுவதும் ஒலிபரப்பு செய்யும். **BBC** மொத்தம் 32 மொழிகளில் ஒலிபரப்பு செய்கிறது. (தமிழ் மொழி உள்ளடங்களாக)


ஐ.நா வின் யுனெஸ்கோ நிறுவனம் மொத்தம் 34 மொழிகளில் சஞ்சிகை வெளியீடு செய்கிறது. இதில் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

# சுவிஸ் பாசல் விளையாட்டுப் போட்டி



பாசல் தமிழ் மன்றம் நடாத்திய வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டு போட்டி கடந்த 13-09-2009 ஞாயிறு காலை பாசல் பிரபலமான விளையாட்டு மைதானமான செஞ்சாக்கேஸ் (ST. Jakof) இல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் பாசல் காரைநகர் வாழ் மக்களின் சிறுவர்களும் குழந்தைகளும் கலந்துகொண்டனர். சிறுவர்களுக்கான 50 மீற்றர் ஓட்டமும் பந்து எறிதல், பழம் பொறுக்குதல் போட்டிகள் பிரதானமான நிகழ்வாக இருந்தன.

காரை நகரைச் சேர்ந்த அமிர்தலிங்கம் அபிராம், அமிர்தலிங்கம் அஸ்வினி, சிவனேஸ்வரன் ராகுலன் சிவனேஸ்வரன் விதுசன், இராஜலிங்கம் ஜனார்தனன், இராஜலிங்கம் கீர்த்தனா, தயாபரன் துவியா, சண்முகராசா திவ்வின், சண்முகராசா தினா ஆகியோர் போட்டியில் கலந்து சிறப்பித்தவர்களாவார்கள்.





# மீண்டும் வலியுறுத்தல்



சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை நிர்வாகம் சுவிஸ் வாழ் காரைநகர் மக்களுக்கு கடிதம் மூலம் காரைநகரில் கட்டப்படவிருக்கும் வெளிநோயாளர் பிரிவு கட்டிட நிதி சேகரிப்பை துரிதப்படுத்தும் வகையில் நிதியை பெற அறிவித்தலை விடுத்திருக்கிறது.

இவ் அறிவித்தல் மூலம் தெரியப்படுத்த விரும்புவதாவது நம் காரைநகரில் சிறந்த ஒரு வைத்திய கட்டிட தொகுதியை நிறுவும் முயற்சியில் 2ம் கட்ட வேலைத் திட்டமாக வெளிநோயாளர் பிரிவு இடம்பெறுவதால் அதற்கான நிதியை விரைவில் கொடுக்க இருப்பதால் சகல சுவிஸ் வாழ் காரைநகர் மக்கள் இதில் விரைந்து செயல்படுமாறு சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.

மேலும் இவ் வைத்திய வசதி காரைநகர் மக்கள் மாத்திரமின்றி தொகுதி, தீவக மக்களும் விரைவில் கூடிய பயன் அடைவர் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.







# கனடா கலாச்சார புதிய நிர்வாகக் குழுவினர்

2009-2010 ற்கான நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தலைவர் ர.ரவீந்திரன் உப தலைவர் த.பரமசிவம், செயலாளர் திருமதி மலர் குழந்தைவேலு, உபசெயலாளர் பா.கணேசன், பொருளாலர் த.சங்கரப்பிள்ளை. உப பொருளாளர் உ.கனகேந்திரம், நிர்வாக உறுப்பினர்கள் கோ.மயில்வாகனம், கு.செல்லத்துறை, ந.பொன்னம்பலம், மோ. சங்கரப்பிள்ளை, நா.தர்மலிங்கம். ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதே போல் அவுஸ்திரேலியாவிலும் புதிய நிர்வாகம் தெரிவாகியுள்ளது.

## விளங்காத விளக்கம்

அன்புள்ள நண்பா!

எனது தமிழை வளர்க்க என்ன வழி
என்று யோசித்தேன். உன்னை அறுப்பது தான்
சிறந்த வழி நண்பா

நட்பை வளர்க்க என்ன வழி ?
கடன் வாங்கு கொடுக்கும் வரை
நட்பு தானாக வளரும்

மாடு விரும்பின இடத்தில் பட்டிகட்ட முடியாது
அகதி விரும்பின இடத்தில் அரசு அமைக்க முடியாது

# காரைநகர் ஐயனார் ஆலயத்தில் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகமும் கணனிப் பயிற்சி நிலையமும் திறந்து வைப்பு

கணபதீஸ்வரக் குருக்கள் நூலகமும் கணனிப் பயிற்சி நிலையமும் காரைநகர் ஐயனார் ஆலயத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

ஐயனார் ஆலய அறங்காவலர் மகாராணி சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்துமத பீடாதிபதி மகேஸ்வரக் குருக்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நூலகப் பிரதான வாயிலை கணபதீஸ்வரக் குருக்களின் புதல்வர் கலாநிதி சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் நாடாவெட்டி திறந்து வைத்ததுடன் கணபதீஸ்வரக் குருக்களின் திருவுருவப் படத்தை ஓய்வுபெற்ற அதிபர் சிவசரவணபவன் (சிற்பி) திரைநீக்கம் செய்தார்.

பெயர்ப்பலகையை லண்டன் நலன்புரிச் சங்க உறுப்பினர் இ.சுந்தரதாஸன் திறந்து வைத்ததுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் மகேஸ்வரனின் திருவுருவப் படத்தினை வர்த்தகர் சிவானந்தராசா திரைநீக்கம் செய்தார். மேலும் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் நூலக அபிவிருத்திக்கான நிதியினை பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன், வாழ்நாள் பேராசிரியர்களான சி.க.சிற்றம்பலம், வே.தர்மரட்ணம் மற்றும் ஓய்வுபெற்ற நீதிபதி இ.ஏகநாதன், முன்னாள் மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், ஓய்வுபெற்ற அதிபர் சிவசரவணபவன் (சிற்பி) ஆகியோர் வழங்கினார்கள்.



வியாவில் ஐயனார் ஆலயத்தில் திறந்துவைக்கப்பட்ட கணபதீஸ்வரக் குருக்கள் ஞாபகார்த்த நூலக திறப்பு விழாவில் (சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள், உதவித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதனையும் மூதறிஞர், கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் நூலகத்தினை நாடா வெட்டித் திறப்பதனையும், நினைவுக் கல்லினை லண்டன் இ.சுந்தரதாஸன் திரை நீக்கம் செய்வதனையும், கணபதீஸ்வரர் படத்திற்கு சிற்பி சிவசரவணபவன் மலர்மாலை அணிவிப்பதனையும் அமரர்.தி.மகேஸ்வரனின் திரு உருவப்படத்தினை வர்த்தகர் சிவானந்தராசா திரைநீக்கம் செய்வதனையும், நிகழ்விற்கு சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவதனையும் மகாராணி க.சோமசேகரம், நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன், கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பேராசிரியர் அ.சிற்றம்பலம், பேராசிரியர் வே. தர்மரட்ணம், ஓய்வு பெற்ற நீதிபதி ஈ.ஏகநாதன், யாழ் மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம், லண்டன் இ.சுந்தரதாஸன், வர்த்தகர் வே.நாகரத்தினம், வர்த்தகர் த.சற்குணராசா, புலவர் வே.குமாரசாமி, இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்குவதனையும், ஸ்ரீ லங்கா ரெலிகொம் அதிகாரி மோகன்ராஜ் அவர்கள் கணனி பிரிவினை ஆரம்பித்து வைப்பதனையும் வர்த்தகர் நாகரட்ணம் நூலக அபிவிருத்தி நிதியத்தினை ஆரம்பித்து வைப்பதனையும் படங்களில் காணலாம்.


# சுவிஸ் அபிவிருத்திச் சபை அதிரடி முடிவுகள்

ஞாயிறு 2009.09.27 அன்று சுவிஸ் சூரிச்சில் இடம்பெற்ற நிர்வாகச் செயற்குழு கூட்டத்தில் சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையினர் காரை நகரில் மேற்கொள்ளவுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட சில வேலைத்திட்டங்களை வெளியிட்டுள்ளனர்.

முதலாவதாக காரைநகரில் வந்து சேர்ந்துள்ள அகதிகளுக்கு பண உதவியும் இரண்டாவதாக நடராசா சிவநேசன் அவர்களின் சிறுநீரக சத்திரசிகிச்சைக்கும் தொடர்ந்து உதவுதல் மற்றும் காரைநகர் வைத்திய கட்டட நிர்மான பணி வேலைகளுக்கு உதவுதல் போன்ற விடயங்கள் தீர்க்கமான முறையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளன.

அதே போல் இவ்வருடம் நடக்க இருக்கும் தீபாவளி கலை விழா கார்த்திகை இறுதிப் பகுதியில் இடம்பெறும் என்பதையும் நிர்வாகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





## கிழக்கு களபூமி குடிநீர் வசதிக்கு உதவ சிவா அன்பர்கள் முன்வந்துள்ளனர்.



காரைநகர் களபூமி பாடசாலைக்கான குடிநீர் வசதியை சுவிற்சர்லாந்தில் வசிக்கும் காரைநகரைச் சேர்ந்த இராசையா அமிர்தலிங்கம் விரைவில் செய்து முடிக்க முன் வந்துள்ளார். மேலும் இவர் தனது சக அயல் நண்பர்களுடன் சேர்ந்து நிதியினை பெற்று இவ் வேலைத்திட்டம் முடிக்கப்படும் என தெரிவித்துள்ளார். அண்மையில் இவ் வருட ஆரம்பத்தில் தாயகம் சென்று வருகையில் தனது பயண அனுபவத்தையும் அவ்வப்போது ஏற்பட்ட அசௌகரியங்கள் பற்றியும் கூறியுள்ளார். ஊர் காரைநகரின் பல இடங்களுக்கும் பொதுவாக சென்று பார்த்து பலரது வாழ்க்கையின் கஷ்டங்கள் துன்பங்கள் பற்றியும் வேறு சில சபைகள் உதவி கேட்டு கடித மூலம் விண்ணப்பித்தமையும் கூறியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு தன்னால் முடிந்த உதவிகளை செய்ததையும் குறிப்பிட்டிருந்தார். சுவிஸ் 15,000 sfr வரையில் உதவித்தொகை வழங்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் உதவும் நோக்கத்தை எவ்வாறு செய்யலாம் என்பதையும் தெரிவித்திருந்தமை பாராட்டுக்குரியது. இவரது சேவை காரை மண்ணுக்கும் குடும்பத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. வாழ்க வளர்க சமூக சேவை

## விசேட கூட்டம் போடமுடியாது
## காரைநகர் அபிவிருத்திச் சபை செயலாளர்
## ஆதித்தியனுக்கு தகவல் !

காரைநகரில் தற்போது மக்கள் மீளக்குடியமர்வு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அவை தொடர்பாக ஆராய்ந்து உதவி செய்வதற்கு முடிவெடுப்பதற்கு விசேட கூட்டம் போடப்பட்டதா என்ற கேள்விக்கு பதில் அளிக்கும் போதே விசேட கூட்டம் போடத்தேவையில்லை என தலைவர் மறுத்துவிட்டதாக செயலாளர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

செயலாளர் மேலும் கூறுகையில் இடம்பெயர்ந்தவர்களிற்கு அரசாங்கம் உதவி செய்யும். நாங்கள் ஒன்றும் செய்யத் தேவையில்லை என்று தலைவர் கூறுகின்றார். நான் ஒன்றும் செய்ய முடியாது. ஏதாவது சிறிய செலவுகள் இருப்பின் கூறுங்கள் எனது சொந்தப் பணத்திலாவது தருகின்றேன்.

லண்டன் காரை அபிவிருத்திச் சபை பிரதிநிதி திரு.இ. சுந்தரதாஸன் வருகை தந்த போதும் நிர்வாகக் கூட்டம் போட்டு அவருடனும் எங்கள் உறுப்பினர்களுடனும் கலந்துரையாடுவோம் என்றும் கேட்டேன் அதற்கும் தலைவர் சம்மதிக்கவில்லை. தானே வீட்டில் வந்து சந்தித்துவிட்டேன். அது போதும் என்று கூறிவிட்டார்.

ஏனைய குறுக்கு கேள்விகளிற்கு விரிவான பதிலாக மௌனத்தையே தந்தார்.

## உறவுக்கு கரம் கொடுப்போம்

கனடா கலாச்சார மன்றம் வன்னியிலிருந்து அகதிகளாக காரைநகர் சென்ற மக்களுக்கு உதவும் வகையில் கனடா காரை மக்களிடமிருந்து நிதியினை பெற்று வழங்க முன் வந்திருக்கிறது. அதற்கான முதற் கட்டமாக காரை நகரில் குடியமர்த்தப்பட்டவர்கள் இடைத் தங்கல் முகாமிலுள்ள மக்களுக்குமாக விபரங்களை கனடாவிலுள்ள உறவினர்களிடமிருந்து தகவல்களை சேகரித்து அதற்கேற்ற வகையில் உதவ முன் வந்துள்ளனர்.

## சிரித்து சிந்தியுங்கள்

கந்தப்பு: அமைதியாய் ஆன்மீகத்தோட இருக்க வேண்டிய கோவிலுக்குள் இரண்டு பேர் சத்தம் போட்டுக்கொண்டு சண்டை பிடிக்கினம். அதை போய் கோவில் தர்ம கர்த்தாவிட்டயோ ஐயரிட்டயோ சொல்லி நிற்பாட்டினா என்ன?

சோமண்ணன்: சண்டை பிடிக்கிறதே தர்மகர்த்தாவும் ஐயரும் தான்.

கந்தப்பு: !? !? !?

**உண்மையின் தோற்றம்**

கந்தப்பு: இவன் மனியத்தான் பள்ளிக்கூடத்தில படிக்கேக்க பிரித்தல் கணக்கு, பிரித்து எழுதுதல் போன்ற பாடங்களில் வலுக்கெட்டிக்காரன்.

சோமண்ணன்: அது அவன் செயல்பாட்டில் தெரியுதுதானே!

கந்தப்பு: எப்படி?

சோமண்ணன்: ஒழுங்காய் நடக்கிற எல்லாத்தையும் பிரிச்சுக் கொண்டு திரிகிறான், அதிலிருந்து புரியிது தானே!

கந்தப்பு: !? !? !?

சோமண்ணன்: நிர்வாகத்திடம் வேலையை பிரிச்சு, பிரிச்சு கொடுத்தது பிழையாப் போச்சு.

கந்தப்பு: ஏன் என்ன நடந்தது?

சோமண்ணன்: நிர்வாகத்தையே பிரிச்சு, பிரிச்சு கொண்டு போட்டாங்க.

*தமிழுக்கும் அமுது என்று பெயர் அதைபேசும்*
*தமிழனுக்கும் அகதி என்று பெயர்*

**ஒற்றுமை வேற்றுமை**

ஆசிரியர்: நிலத்தில் இருக்கிற தமிழ் அகதிகளுக்கும் புலத்தில் இருக்கிற அகதிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்னவென்று சொல்லுங்கோ

மாணவன்: **ஒற்றுமை**– அங்கும் அகதி தான். இங்கும் அகதிதான் **வேற்றுமை** – நிலத்தில் அவலப்பட்ட அகதி புலத்தில் அலங்கார அகதி

ஆசிரியர்: நிலத்தில் இருக்கிற தமிழனுக்கும் புலத்தில் இருக்கிற தமிழனுக்கும் உள்ள பிரச்சினை என்ன? -

மாணவன்: நிலத்தில் இருக்கிற தமிழனுக்கு சிங்களவரால் பிரச்சினை புலத்தில் இருக்கிற தமிழனுக்கு தமிழனாலேயே பிரச்சினை.



*மூல ஆக்கம்*
*ரவி செல்லத்துறை*
*– சுவிற்சர்லாந்து*

## பிரான்ஸ் செய்தி

பிரான்ஸிலிருந்து கடந்த யூன் 20 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை இடம் பெற்ற பல்கலைக்கழகத்திற்கான பொறியியல் மருத்துவ, கலை பீடத்திற்கான பரீட்சையில் காரைநகரைச் சேர்ந்த மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்று பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் அடுத்த இதழில் வெளிவரும்

## பிரான்ஸின் சுதந்திர விழா

பிரான்ஸ் மாநகரில் (பாரீஸ்) கடந்த யூலை 14ஆம் நாள் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற 220வது சுதந்திர தின விழா வெகு விமர்சையாக "ஸம்சலிசே" சதுர்க்கத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு நாட்டின் அதிபர் நிக்கோலா சார்க்கோஸியினால் இந்திய திருநாட்டின் பிரதம மந்திரி மன்மோகன்சிங் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். கூடவே இந்திய நாட்டின் முப்படைகளான ஆகாய கடல் தரை படை வீரர்களின் அணி வகுப்பு இச் சதுர்க்கத்தில் இடம் பெற்றமை அதி சிறப்புக்குரியதாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து ஈவிள் டவரின் 120வது பிறந்த நாள் விழாவும் நடைபெற்றது. இவ் ஈவிள் டவர் பிரான்ஸின் 100வது சுதந்திர நினைவை ஒட்டி 1889ல் கட்டப்பட்டு சிறப்பிக்கப்பட்டது. மேலும் இவ் டவரின் 100வது பிறந்த நாள் சிறப்பாக 1989இல் அப்போதைய இந்திய பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதோடு இந்திய நாட்டின் கலாச்சார விழாவும் இடம்பெற்று சிறப்பு பெற்றமை அனைவரும் அறிந்தது. இன்று இந்திய பிரதமர் உட்பட முப்படைகளும் கௌரவிக்கப்பட்டுள்ளன.

இதன் பின் பிரான்ஸின் முன்னணி பாடகார் ஜொன்னி அலிடாவின் இசை நிகழ்வுகள் மிகப் பிரமாண்டமாக இடம்பெற்றதோடு மனதை பிரமிக்க வைக்கும் வானவேடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

## வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து 927 பேர் காரைநகரில் மீளக்குடியமர்வு

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப் பட்டிருந்த 315 குடும்பங்களைச் சேர்ந்த 927 காரைநகர் மக்கள் 02.10.2009 வரை மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் குறைந்தது நான்கு கட்டமாக இன்றும் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

*(02. 10. 2009ம் திகதி எழுதப்பட்டது)*

பிரித்தானியாவிலிருந்து

## லண்டனில் சங்கீத அரங்கேற்றம்

பிரித்தானியா லண்டன் மாநகரில் செல்வி சோமசுந்தரம் திவ்வியா அவர்களின் சங்கீத அரங்கேற்றமும் வயலின் அரங்கேற்றமும் கடந்த ஆவணி 22ஆம் நாள் 2009 அன்று சங்கீத இசைக் கலைமணி திருமதி. சுகிர்தகலா கடாச்சம் அவர்களின் முன்னிலையில் இடம்பெற்றது. இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக இலங்கையில் இருந்து திரு.நா.வேலுப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர் யாழ்ற்றன் கல்லூரி) திரு.சங்கீத பூசணம் கணபதிப்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கனடாவிலிருந்து கனேடிய தமிழ் வானொலி இளையபாரதி அவர்களும் இவ் விழாவை சிறப்பித்திருந்தார். மேலும் செல்வி திவ்வியா சோமசுந்தரம் காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த திருமதி காமாட்சி அவர்களின் பேத்தியார் ஆவார்.

## லண்டன் நலன்புரிச் சங்கத்தின் புதிய தலைவர் தெரிவு


தலைவர்

லண்டன் நலன்புரிச் சங்கத்தின் நடப்பு வருடத்தின் நிர்வாகக் கமிட்டி தெரிவு கடந்த 27.09.09 அன்று இடம்பெற்றது. மீண்டும் தலைவராக திரு.எஸ் நாகேந்திரம் அவர்களும் செயலாளராக திரு.எஸ்.சிவா மகேசன் அவர்களும் பொருளாளராக திரு.எஸ். ஞானேந்திரம் அவர்களும் தெரிவாகி லண்டன் நலன்புரிச் சங்கம் தொடர் வேலைத் திட்டங்களில் ஈடுபடுகிறது. இதன் முதற் கட்டமாக காரைநகரில் வந்து சேர்ந்துள்ள அகதிகளுக்கு தேவையான முதற்கட்ட உதவி வழங்கப்பட்டுள்ளன. இதனை காரைநகர் அபிவிருத்திச் சபை முன்னெடுத்து வருகிறது.

## பிரித்தானியாவில் கௌரவிப்பு விழா

இலங்கையிலிருந்து சென்ற திரு.நா.வேலுப்பிள்ளை இளைப்பாறிய அதிபர் யாழ்ற்றன் கல்லூரி (14 வருடம் சேவை) சங்கீத பூசணம் திரு. கணபதிப்பிள்ளை உட்பட அங்கு வாழ்ந்து வரும் மற்றை ஆசிரிய ஆசிரியைகளும் இளைப்பாறிய வைத்தியர் திரு. ந.நடராசா அவர்களும் மிக சிறப்பான முறையில் லண்டன் நலன்புரிச் சங்கத்தினரால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.



## தரம் 05 புலமைப் பரீட்சையில் 12 மாணவர்கள் சித்தி

இவ்வருடம் நடைபெற்ற தரம் 05 மாணவர்களிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் காரைநகர் பாடசாலைகளைச் சேர்ந்த 12 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் 06 மாணவர்களும், கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் 04 மாணவர்களும் மெய்கண்டான் வித்தியாலயத்தில் 01 மாணவனும் சுந்தரமூர்த்தியில் 01 மாணவருமாக 12 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்கள் மென்மேலும் பல சித்திகளையும் பெற ஆதித்தியன் சார்பில் வாழ்த்துகின்றோம். மாணவர்களின் படங்கள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

## மகாத்மா காந்தி 140 வது தினம்



வாழ்க்கை முழுவதும்
உண்மையாய் இருப்பதும் எல்லா
உயிர்களிடத்தும் அன்பாய்
இருப்பதும் தான் வாழ்வியல்

– மகாத்மா காந்தி –



காரைநகரில் மீளக்குடியமர வருகை தந்த பொது மக்களையும், நடவடிக்கையை பார்வையிட வந்த யாழ்மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த. ஜெயசீலன் உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி ஆகியோர் பொதுமக்களுடன் கலந்துரையாடுவதனையும் படங்களில் காணலாம்

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 . 06 . 1957 |  | 29 . 09 . 2009 |

அமரர்

### செல்வநாயகம் நாகேஸ்வரன்

காரைநகர் அல்லின் வீதியைச் சேர்ந்த செல்வநாயகம் நாகேஸ்வரன் அகால மரணம் அடைந்துள்ளார். பிரான்ஸை வசிப்பிடமாகக் கொண்ட இவர் காரை நகரைச் சேர்ந்த செல்வநாயம் தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு புதல்வனும் சிவரஞ்சனியின் [பாமா] அன்பு கணவரும் நந்தினி, நந்துஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 07.10.2009 புதன் கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது.

[தொ.பே: 01 48483190]

## நினைவு மலர் நூல் வெளியீட்டு விழா

பிரான்ஸில் கடந்த 05–06–2009 இல் காரைநகர் வாழ் மக்களால் அமரர் திரு.மகேஸ்வரன் அவர்களின் நினைவு மலர் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது. இவ்வைபவத்தை சுடர் ஒளி ஆசிரியர் திரு.ஐ.டீ. சம்பந்தர் அவர்கள் வெளியிட்டு வைப்பதையும் அதில் கலந்துகொள்ளும் காரைவாழ் அன்பர்களையும் படங்களில் காணலாம்.





## கண்ணீர் அஞ்சலி



அமரர்.

### விக்னேஸ்வரன் சுதர்ஸன்

காரைநகரின் புகழ்பூத்த கல்விமானும் கருங்காலியை பிறப்பிடமாகக் கொண்ட கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனின் கனிஷ்ட புத்திரன் சுதர்ஸன் கடந்த 28.09.09 அன்று மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினரும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

புலம்பெயர் காரை மக்கள் சார்பாக
காரை ஆதித்தியன் குடும்பம்

## வீடு இரண்டுபட்டால் கூத்தாட்டிக்கு கொண்டாட்டம்

நேற்றைய நிலமைகளை தூண்டிவிட்டு மக்கள் மனங்களை பாதிப்படையச் செய்த இலங்கை தமிழ் சிங்கள நாளிதழ்கள் இன்று யுத்த செய்திகள் இல்லாததனால் மிகவும் வேதனையடைந்து நொந்து போயுள்ளன. இலங்கையிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள் மட்டுமன்றி புலம்பெயர் நாடுகளிலும் மற்றும் இணையத்தளங்களில் வெளியீடு செய்து வரும் செய்திகளில் மிக மிக தொய்வு நிலைமை காணப்படுகின்றன. மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பது யுத்தத்தினால் அல்ல, அவர்களின் வாழ்க்கை திட்டமிட்ட அடிப்படையில் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏற்படுத்தி வரும் சாதக பாதக நிலமைகள் மிக உன்னிப்பாக அவதானித்து தர்மத்தின் நிலை நின்று அவற்றை சீர்தூர்க்கி பார்த்து எழுதுவதன் மூலம் மக்களின் நல்வாழ்க்கைக்கு எளிதில் பங்காற்ற முடியும்.



ஆனால் கடந்த கால பத்திரிகைகளின் மிகப் பெரிய பாதகமான நடவடிக்கைகளும் ஒரு வகையில் இன்று மக்கள் துன்பப்படக் காரணம் என்று கூற முடியும் ? எதை முதன்மைபடுத்தி எழுத வேண்டும் என்பதில், தெளிவான கொள்கைகளற்ற நிலமையும், பத்திரிகை லாப நோக்கமாகக் கொண்டதும் ஒன்றே?? இன்றைய அங்கலாய்ப்புக்குக் காரணம். செய்தித் தாள்கள் எப்போதும் சுய சந்தர்ப்பத்தை நோக்கமாகக் கொண்டே செயல்படுகின்றன. அதாவது இன, மத, சாதி நிலமைகளை வேண்டும் என்றே கிளறிவிட்டு அன்றைய பொழுதை கழித்து வந்துள்ளன. அவர்களிடையே தேசிய சர்வதேச கொள்கைகளோ அல்லது மக்களின் நல்வாழ்க்கையில் அக்கறை என்பது அறவே கிடையாது.

பாரிஸிலிருந்து -ஊரான்-

## இசையால் இதயத்தை வசப்படுத்திய மைக்கல்

*இசையால் வசமாகா இதயம் எது?*



கோடிக்கணக்கான இசைப் பிரியர்களை வசப்படுத்திய மைக்கல் ஜாக்சனின் வாழ்க்கை சாதனைகளும் வேதனைகளும் நிறைந்தது.

ஜூன் 25 ஆம் திகதி மைக்கலின் மரணச் செய்தி உலக இசைப் பிரியர்களை அதிர வைத்தது. 1958ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் நாள் இண்டியானா நகரில் ஜோசப் வால்டர் கேத்தரின் எஸ்தர் என்ற ஏழைத் தம்பதிகளின் 7வது மகனாக பிறந்தார். மொத்தம் ஒன்பது குழந்தைகள். வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தாலும் மைக்கல் இளம் வயதிலேயே இசையின் மீதும் நடனம் மீதும் அதிக நாட்டம் கொண்டவராகவே காணப்பட்டார். நவீன இசை உலகை தனது ஆளுமையால் கட்டிப் போட்டிருந்தார். அதே நேரம் பல்வேறு சர்ச்சைகளும் அவரது வாழ்வில் நிறைந்து காணப்பட்டன.

11 வயதில் அவர் நடாத்திய 'தி ஜாக்சா 5' என்ற இசை நிகழ்ச்சி பாப் இசைப் பிரியர்களின் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி ஜாக்சனின் இசைப் பயணம் வெற்றிகரமாக பயணிக்க தொடங்கியது. 1971 இல் ஆரம்பித்து 1972, 1979, 1982, 1987, 1991, 1995 தொடர்ந்து வெளியிடப்பட்ட இசை சவால்கள்

உலக அளவில் பலத்த வரவேற்பை பெற்றது. 75கோடி ஆல்பங்கள், 13 கிராமிய விருதுகள் பெற்று கின்னஸ் புத்தகத்தில் பதியப்பெற்று அதிசயிக்க வைத்தார் மைக்கல் ஜாக்சன்.

திடீர் மாரடைப்பு காரணமாக, லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின் நிறைவு திரும்பாமலேயே மரணத்தை தழுவிக் கொண்டார். ஜாக்சனின் மரணச் செய்தி உலகம் முழுவதிலுமுள்ள ரசிகர்களுக்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. முடிசூடா மன்னன் மைக்கல் ஜாக்சன் கடைசி 10 ஆண்டுகளாக தனிமையிலேயே வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




10 வயதில் பண்ணை வேலை செய்ய ஆரம்பித்து இன்று வரை பண்ணை வேலை செய்து கொண்டு வரும் அன்னை



காரைநகரில் முதன் முதலாக அமைக்கப்பட்ட அலங்கார வளைவு பிரதான வீதி சிவகாமி அம்மன் வீதியில்



காரைநகர் சமுர்த்தி வங்கியினால் வாழ்வாதார திட்டத்தின் கீழ் கடற்தொழில் உபகரணம் வழங்கும் நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் பயனாளி ஒருவருக்கு கடற்தொழில் உபகரணம்

SKT நாதன் ஜவுளி சமுத்திரம்

ஒரிஜினல், வீடியோ படங்கள்,
மரக்கறி வகைகள், கடல் உணவுப் பொருட்கள்
மற்றும் அரைத்து சலித்து சுத்தம் செய்யப்பட்ட அனைத்து
வகை மலிகைப் பொருட்களையும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Quellen
STR - 1 CH
8005 Zurich
Tel No : 044 2724336
Fax : 044 2732377

முகூர்த்தப் பட்டுப்புடவைகள், மைசூர் சில்க், காஞ்சிபுரம், பனாரஸ் சாரீஸ்,
பட்டு வேஷ்டி,சால்வை மற்றும் பஞ்சாபி வகைகள் சிறுவர்களுக்கான அனைத்து ரக
ஆடைகள் மற்றும் அனைத்து ரக துணி வகைகள் வாங்க வாருங்கள் நாதன் கடைக்கு !

22K INDIAN & SINGAPORE GOLD JEWELLERY AVAILABLE

SK TRADING GMBH

Josefstr, 137, 8005 Zurich. Tel No: 044-2124330 Fax No: 044-2724332







காரைநகர் வேதரடைப்பு முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் விருந்தினர்களாக உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ.குமரேசமூர்த்தி மற்றும் தொழிலதிபர் இ.ஜெயராசா ஆகியோருக்கு மலர்மாலையிட்டு வரவேற்கப்படுவதனையும் வெற்றி பெற்ற சிறுவனுக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி பரிசு வழங்குவதனையும் படங்களில் காணலாம்.